


# தமிழ் முற்றம்

Thamil Muttam

ISSN 2386-1541

தமிழ்:01 டிசம்பர் -2014 விலை -50/= முற்றம்:04



அருட்திரு
**நீ.மரியசேவியர் அடிகள்**
(இயக்குனர்-திருமறைக்கலா மன்றம்)



அடங்காத் தமிழன்
**செ.சுந்தரலிங்கம்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN-2386-1541

# தமிழ் முற்றம்

Thamil Muttam


## ஆசிரியர்
காவலூர் இ.விஜேந்திரன்

## ஆலோசகர்கள்
எஸ்.ஜோசப்பாலா
நவாலியூர் நடேசன்
வேலணையூர் தாஸ்
கௌரிகாந்தன்

## அச்சமைப்பு
சத்தியா பிறிண்டேர்ஸ்,
153/11 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்க வடிவமைப்பு
யோ.இன்பரூபன்



## முகவரி
தமிழ் முற்றம்
வின்லான்ட் புத்தகசாலை,
இல 61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## மின்னஞ்சல்
iravin@gmail.com

## தொலைபேசி
021 5683395
077 4412518



## சந்தா விபரம்
உள்ளூர் தனிப்பிரதி- 50/=
அரையாண்டுச்சந்தா- 350/=
ஆண்டுச் சந்தா- 700/=
வெளியூர் தனிப்பிரதி 9 யூரோ
(தபால் செலவு அடங்கலாக)

ISBN 9-772386-154004


## முற்றத்து கலைப் பூக்களை கருகவிடாதீர்

முற்றத்தில் கூடி முன்னோர் கதைகள் பேசி கலை,கலாச்சாரம் பண்புகள் பகிர்ந்து சந்திப்புக்களாக புதிய வெளியீடுகள்,மலர்வது கண்டுமகிழ்ச்சி அடையும் நல்ல சந்தர்ப்பங்கள் மகிழ்வைத் தருகிறது.

லாபநட்டம் பாராது,நட்புகள் பகிர்ந்து நல்லுறவை பேணுவது கலைஞர்கள் மட்டத்தில் ஆரோக்கியமானதே. இவை தொடரதொடர்புகளை வலுவூட்ட அழைப்புவரும் காலத்தை தவறவிடாதீர்கள். இது போல் புதிய படைப்பாளிகளையும், படைப்புக்களையும், கலை முயற்சிகளையும் வளர்க்கவேண்டிய பொறுப்புக்களிலும் முன்நின்று உழைக்கவேண்டியது எமது காலத்தின் தேவையாக உள்ளது.

படைப்புக்கள் புதிதாக வெளிவரவேண்டும். மதிக்கப்பட வேண்டும். தமிழ் முற்றங்களில் இவை கலந்துரையாடப். படவேண்டும். இவை சமூக உறவுகளைபேணும் சனசமூக நிலையங்கள் ,மாதர்சங்கங்கள், பொது அமைப்புக்கள், பாடசாலை மாணவர் மட்டங்களிலும் எழுத்து, வாசிப்பு, சிந்தனைதிறன் வளர்க்கும் தூண்டல்கள் உருவாக்குவதில் பொறுப்புள்ளோர் முன்னின்று உழைத்தாலே கலை இலக்கிய உலகில் புதியதேடல், புதியபடைப் பாளிகள்,புதியவாசகர் ரசனை கலைப் பூங்காவாக பெருகவாய்ப்பாக அமையும். போலிமாயைக்குள் மூழ்கி இருக்கும் இறக்குமதி பொழுது போக்குகள் இன்று பெருகிவருதல் பொறுப்புள்ளவர்கள் நல்வழிகாட்டத் தவறியதும், இளையோர் சிறப்புக்களை வெளிப்படுத்த தூண்டிதுலங்கவைப்பதில் ஏற்பட்ட அலட்சியங்களுமே என ஏற்றுக்கொள்வோம்.

மாதமொரு நிலாமுற்றம் சந்திப்பாக மலரவேண்டும். புதியபழைய சிந்தனைதிறன் மிக்கோரை எம் சூழலில் வெளிப்படுத்தும் கலந்துரையாடல் களங்கள், அறிமுகப்படுத்தும் திறன்கள், ஊக்கப்படுத்தும் நற்செயல்களாக முன்வந்தால் அதுவே முன்னுதார செயல்களாகும். சமூகத்தில் உள்ளதிறமையானோர் பாட சாலைகளில் உள்ள சிறப்புவாய்ந்த மாணவர்கள், ஆசிரியர் களால் புதிய வாசிப்பு சமூகம் உருவாகவாய்ப்பாக உங்கள் முற்றங்களை பயனாககொள்ளலாம்.

கலைகலாசார உத்தியோகஸ்தர்கள் கலை படைப்புக்களை வெளிப்படுத்தவும் பிற மாவட்டங்களுக்கு பகிர்ந்து கொள்ளவும் ஒன்றுகூட்டவும் முடியும் என்பதை அண்மையில் தென் பகுதி பிரபல்யமாக நாவல்,சிறுகதை, கவிதை,கட்டுரை வெளியீடுகளை வெளியிட முன்வந்த வெளியீட்டாளாகள் வருகையின்போது உணரமுடிந்தது. அவர்களின் ஆர்வம் போற்றப்படவேண்டியது.

புதிதாய் நூலுருவாக்கு வோருக்கான வழிகாட்டல், பகிர்தல்,ஊக்கப்படுத்தலை அரசு,பொது அமைப்புக்கள் முன்நின்று போலி இறக்குமதி வியாபார தூண்டலுக்கு துணைபோகாது எம்மூர் கலைஞர்களின் திறமைக்கும், எமதுமண்ணின் மனப்பதிவுகளை பகிர்வதற்கும் சிறந்த சேவை ஆற்றுவது பொறுப்புள்ளவர்களின் சிறந்த பங்களிப்பாகஅமையும். எம் முற்றத்து கலை பூக்களை கருகவிடாது காப்போம். எம்மூர் கலை, இலக்கிய வாதிகளையே தெரியாத அறியாத கலாசார பணியாளர்களும் சமூகஅமைப்புக்களும் தம் சமூகத்தை பிரதிபலிப்பதாக கூறுவதில் அர்த்தமில்லை..

ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தசாப்தம் கடந்ததுவோ!

**-மேசியன்-**

நேற்றுப்போல இருக்கிறது
இயற்கை அன்னை சீற்றம் உலகை உலுக்கி
"சுனாமி"ப் பேரலையால் உயிர்களைக் காவுகொண்டு
ஒரு தசாப்தம் கரைந்ததுவோ?
கூட்டுக்குடும்பங்கள் கூட்டோடு பிரிந்து
இழப்புக்கள், இறப்புக்களால் தனித்து விட்ட
உறவுகளை நினைந்து கொள்ளும் வேளையில்
எவருமே நினைவு கூரப்படாத
இழந்துபோனவர்கள் ஆத்மசாந்தி பெறவும் வேண்டுவோம்
பூண்டோடு பெயர்த்த சுனாமியின் அலைகள்
மனிதனின் சக்தியைமிஞ்சிய இயற்கைதந்த
முக்கிய செய்திகள் பாடமாக கற்றுக் கொள்வோம்
"சுனாமியின்" கோரத்தாண்டவத்தை மனிதகாப்பரண்
தம் மனிதாபிமான பணிகளால் இணைந்து
மனிதம் காத்துபுனிதம் பேணிய உதவும் கரங்களால்
உலகில் பலநாடுகளில் உறவுகள் தஞ்சமாகி
மறுவாழ்வு காண்பதுடன் குடிசைகளும் இன்றுகோபுரமாக
இல்லங்கள் புதுப்பொலிவுடன்,வாழ்வாதார மாற்றங்கண்டு
அனர்த்தங்கள் எதிர்கொள்ளும் அறிவினை பகிர்ந்து
இயற்கையோடு உறவு கொள்ள விழிப்பினை பெற்றது
புத்தாண்டு கடந்தவைகளை மீட்டுப்பார்ப்பதில்
நம்நாட்டு உறவுகள் உலகெங்கும் சென்றபோதும்
மனக்காயம் சுமந்த உறவுகளையும்,நட்புக்களையும்
ஓர்கணம் சிந்திக்க இயற்கைஅன்னைஅழைக்கிறாள்
நினைவுச் சின்னங்களாக இறந்தோரின் நன்மைத்தனங்களும்
இருப்போரின் வாழ்வு மாற்றங்களும் இயற்கையோடு
இணைந்து செல்ல மனித சக்தியைவெல்லும்
இறைவனின் இயற்கையின் படைப்பில்
அக்கறையோடு அடுத்த சந்ததிகள் பயன்படுத்த
நினைவு செயல்களால் மனித உறவுகள் பலம் சேர்க்க
மனித வாழ்வை அர்ப்பணத்தோடு அர்த்தமுள்ளதாக்குவோம்

**நினைவகலா நினைவுகளுடன்**
**சிற்பத்தால் நினைவு கூரும்**
**எம் சிற்பக் கலைஞன்**
**ஏ.வி.ஆனந்தன்**



## சிறந்த நூல்களுக்கான தமிழ் நூல் விருது-2014

01.01.2013 முதல் டிசம்பர் 31 வரையான காலத்தில் முதல் பதிப்பாக வெளிவந்த சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், உளவியல் ஆகிய துறைகளில் சிறந்த நூல்களிற்கு தமிழ் முற்றம் சஞ்சிகை ,வின்லான்ட் புத்தகசாலை மற்றும் வெளியீட்டகம் இணைந்து தமிழ்நூல் விருதுடன் பணப்பரிசினையும் சான்றிதழையும் வழங்கவுள்ளது.31.12.2014 இற்கு முன்னர் நூல்களின் மூன்று பிரதிகளை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தமிழ் நூல் விருது-2014**
**இல,61 ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமித்தாயின் மூச்சுக்காற்று

-குருஜீ-

மண் மணம் மாறாத நினைவுகள் சுமந்த
பூமித்தாயின் மூச்சுக்காற்றது
முடங்கிக் கிடக்கும் முதுமைக்கும்
முற்றத்தில் நிற்கும் மா,பலா,வேம்புக்கும்
விதைநெல் முளைவிட்டுப் பயிராக
மழைபெய்தால் மண் மணம் வீசும்
மண்ணின் மூச்சுக்காற்றே
உயிர்பூவை மலரவைக்கும்
சூழவான் முட்டும் விளையும் பயிர்கெல்லாம்
வேர்விட்டு தாழ் நிலம் சென்று
நீர் தேடி உயிர் தந்த
விழை நிலம் மலடானது ஏன்
மூச்சுக்காற்று அடங்கியதேன்?
நவீனத்தின் தேடல் என
குடிசைகள் சுற்றி சுவரிட்டு
பசுமைகாத்த வனங்களெல்லாம் அழித்தெடுத்து
வீடுமனை மாடிகள் வீறு கொண்டு எழுந்து
சூழமிஞ்சியதாய் நிலமும் இப்போ
தாரிட்டு கொங்கிறீற் கல்லுப்பரவி
அழகு பார்க்கும் அரக்க மனங்களால்
தாய் மண்ணின் மூச்சுக்காற்று அடங்கி
மலட்டுதனம் வறட்சியாகி,வனாந்தரமாகி
நோய் பரப்பும் கிருமிகள் பெருகி அழிக்க
கொதிக்கும் வெயிலை உள்ளிழுத்து
வேர்களுக்கு நீரின்றி பயிர்கள் கருகிப் போக
தாரிட்டவீதியும் தரைஎங்கும்
சீமெந்து போர்வையாலே தாய் மண் மூடி
நிமிர்ந்த பனை தென்னை மா பலாமரம் வீழ்த்தி
மண்மணம் மாறி நீரூற்றுமுலைகள்
வற்றி அடைத்துப்போக
கனிவளம் கொண்ட எம் பூமித்தாய்
மூச்சுக் காற்றைவிட முடியாது ஏங்கிநிற்க
மண்ணுக்குள் புதையுண்ட மண்புழுவும் உயிரிழக்க
நிலமகளின் காயத்தின் வடுக்கள்தான் நோயாய் மாற
மனிதனின் வறட்டு சிந்தனையால் வசமாகி
மண்ணின் மூச்சுக்காற்று மூச்சடங்கிப் போனதுவோ?
மண்ணில் விளையாடிய மழலைகளிப்போ
மனைகளுக்குள்ளே முடங்கியிருக்க
மண்வாசனை உணராமனங்கள்
மண்பற்று மானஉணர்வுகள் மங்கிப்போக
தாய்நிலத்தின் மூச்சடங்கிகுற்றுயிராய்க்கிடக்க
பசுமைபற்றி பேசிப்பேசியே வாழ்வைப் போக்கி
பலநோய்கள் காவும் ஜடங்களாகிப் போனவர்கள்
பூமித்தாயின் மூச்சைவிட
முன்யோசனை சொல்வார் எவரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் மனசு பற்றி மனம் விட்டுப் பேசுவோம்

மருத்துவர்: எஸ். சிவதாஸ்

### மனம்

மனம் எங்கே இருக்கிறது என்பது என்றும் புதிரான ஒன்றே. பலர் அது இதயத்தில் இருப்பதாக நம்புகிறார்கள். நெஞ்சைத் தொட்டு உணர்ச்சி வசப் படுவதை நாம் அன்றாடம் காண கின்றோம். மனம் இயங்குகின்ற மூளையில் இருக்கின்றது என்பதே விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. ஆனால் அதன் எல்லைகளோ மூளைக்கு வெளியே பிரபஞ்சத்தைத் தாண்டியது. ஆதலால் அதன் ஆற்றல் அசாத்தியமானது.

மனதில் நினைவில் நிற்கும் எண்ணங்களை விட நினைவிலியில் உறைந்திருக்கும் எண்ணங்கள் பத்து மடங்கு அதிகமானது என்பது உளவியலா ளர்களின் கருத்து. நாம் இவ்விரு மனங் களிலும் அலைக்கழிக்கப் படுகின்றோம் என்றால் அது மிகையானதல்ல.

நினைவு மனம் தெளிவாக ஞாபகத் திற்கு வரக்கூடியது. பல நிகழ்வுகளின் பிரதி பலிப்புக்கள் இந்த மன எண்ணத்தின் விளைவாக ஏற்படுகின்றன. இது ஒரு நீரோடை போன்று நிதர்சனமானது. ஓரளவில் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடியது. ஆனால் நினைவிலி மனமோ இதற்கு மாறாக ஒரு அடர்ந்த வனம் போன்றது. பாதை தெளிவில்லாத பயணியைப் போன்று அதனுள் புதைந்திருக்கும் புதிர்கள் ஏராளம்.

மிரண்டு ஓடும் காளை மாட்டுக் கூட்டத்தை நாம் கட்டுப்படுத்துவது எவ்வளவு கடினமானதோ அதே போன்று தான் அலைபாயும் மனமும். நுகத்தடியில் இணைக்கப்பட்ட காளை மாடுகள் போன்று மனதினைத் தனது கட்டுக்குள் கொண்டு வருவதே மனிதனின் வாழ்க் கைப் பயணமாகும். இது தொடர் பான மனப் பயிற்சி ஒன்று தான் அவனது வாழ்க்கையில் வளர்ச்சிப் பயணத்தை உறுதி செய்கிறது.

### ஒரு ஆரோக்கியமான மனம் எவ்வாறு அமைந்திருக்கும்?

+ தெளிவாக சிந்தித்தல்
+ பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்
+ உபயோகமாக வேலை செய்தல்
+ மற்றவர்களிடம் மகிழ்ச்சியாக உற வாடல்
+ சமூகத்திற்கு உபயோகமாக பங்களித்தல்

உடல் ஆரோக்கியம் பற்றி தேவைக்கு அதிக மாகக் கவலைப்படும் நாம் மன ஆரோக்கியம் பற்றி சிறிதளவாவது கவனம் செலுத்துவது இன்றைய வாழ்க்கை முறைக்கு மிகவும் அவசிய மானது. அதுவும் வேகமாக மாறி வருகின்ற ஆரோக்கியத்தினைக் கருத்தில் கொள் ளாத தொழில்நுட்ப வளர்ச்சியின் போக்கில் அதாவது, விரைந்து பயணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற இன்றைய உலகில் இதன் முன் எப்போதையும் விட அதிகமாக காணப் படுகின்றது.

உடல் நலம் என்பது வெறுமனே நோய்கள் அற்ற நிலை என்று கருதிவிட முடியாது. மிகப் பருமனான ஒருவருக்கு நீரழிவு நோய் இல்லை என்பதற்காக அவரை ஆரோக்கியமானவர்என்று கருத முடியுமா? இவரைவிட நீரழிவு நோய்க் குட்பட்ட ஒருவர் சரியான ஒழுங்கு முறைப்படி மனக்கட்டுப்பட்டுடன் வாழ்வாராயின் அவரது ஆரோக்கிய நிலை மேன்மையானது.

அதுவும் ஆரோக்கிய நிலை மேன்மையானது. அதுவும் அவர் கிரமமான உடற் பயிற்சியும், மனப் பயிற்சியும் மேற்கொள்வாராயின் உன்னத மான ஆரோக்கிய நிலை நோக்கிப் பயணிக்கின்றார் என்பதே சாலப் பொருத் தமானது அவர் தனது ஆரோக்கியம் பற்றி சரியான புரிதலுடன் வாழ்கின்றார் அல்லவா? அது அவரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்து கின்றது.

இன்னுமொருவர் தனக்கு நோய் இல்லை என்பதால் எவ்வித கட்டுப்படும் இல்லாமல் உணவுப்பழக்கத்தைக் கொண்டிருப் பாராயின் அது அவ ருடைய வாழ்க்கையை ஆரோக்கிய மற்ற நிலைக்கும், நோய் நிலைக்கும் இட்டுச் செல்லும் இத்தகைய ஒருவரின் வாழ்க் கைத்தரம் என்பது மிகத் தாழ்வானதே.

எனவே தான் நாம் உடல் ஆரோக் கியத்திற்காக கிரமமாகப் பாடுபட வேண்டி உள்ளது இதுவே மன ஆரோக் கியத்திற்கும் பொருந்தக்கூடிய அடிப் படை யாகும்.

எம்மில் பலர் தமக்கு மன நோய் இல்லை என்பதால் தாம் மன ஆரொக் கியமாக இருக்கின்றோம் என்று தப்புக் கணக்கு போடுகின்றனர். ஆதலால் நாம் மனநலம் பற்றி அல்லது மகிழ்வான வாழ்க்கை பற்றி புரிதலின்றி வாழத் தலைப்படுகின்றோம்.

உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்படும் போது அது மனதினைப் பாதிக்கின்றது அதேபோல் மனதின் பாதிப்புக்கள் உடலுக்கு கேடு விளைவிக் கின்றன. மனநலம் இன்றி உடல் நலம் இல்லை.

எனவே தினமும் மனதிற்குரிய தேவை களைப் பூர்த்தி செய்து அதனை சாந்தப் படுத்தி நல்ல எண்ணங்களால் நிரப்பி பிறருடன் நல்லுறவுடன் கூடிய இணைப்பினை ஏற்படுத்தி வாழ்தல் வேண்டும் அதுவே மன ஆரோக்கியத்திற்கு வழிகோலும்.

அத்தகைய மன ஆரோக்கியமே மனித மன வளர்ச்சி நோக்கிப் பயணிக்கும் மனித மனம் வளர்ச்சி நோக்கி பயணிக்கும் போதுதான் விருத்தியடைகின்றது. மனவிருத்தி ஒன்றே மனித மனங்களை இணைக்க வல்லது அந்த இணைப்பு ஒன்றே மகிழ்ச்சி தரவல்லது.

## மனநலம்

மனநலம் என்பது ஆரோக்கியமான மனதின் வெளிப்பாடாகவே அமை கின்றது. ஆரோக்கியமான மனநலத்தைக் கொண்டிருப்பவர்கள் பின் வரும் செயற் பாடு உடையவர்களாக காணப்படுவர்.

1. தங்களுடைய திறன்களை அறிந்து கொள்ளல்
2. சாதாரண நெருக்கடிகளை எதிர் கொள்ளல்
3. முழுமையான உற்பத்தியாகக் செயற்பாடுகளில் ஈடுபாடுதல்
4. சமூகத்திற்கு காத்திரமாகப் பங் களித்தல்.

### 1. மனநலத்திற்கு நீங்கள் செய்யக் கூடியவை

உங்களுக்குரிய நேரத்தை, வெளி யினை எடுத்துக் கொள்ளல்ஒரு மனிதனின் தன்னக வெளி அவனது ஆரோக் கியத்திற்கு மிகவும் அத்தியா வசியமானது. நவீன வாழ்க்கை முறையில் நாம் இதனையே தொலைத்துக் கொண்டு இருக்கின்றோம் இவ்வெளியினைப் பெற்று நேரத்தை சரியாகக் கையாண்டு வாழ்க் கையைத் திட்டமிடும் போது அது மனநலத்திற்கு வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. உங்களுக்குரிய சாந்தப்படுத்தும் வழி முறையை தேடிக் கொள்ளல்**

நெருக்கடி மிகுந்த வாழ்க்கை முறை எம் மனதில் பதற்றத்திற்கு வித்திடுகின்றது. பதற்றமான மனம் தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுக்காது அல்லலப் படுகின்றது. எனவே தான் ஆத்மீகம் சார்ந்த சாராத சாந்தப்படுத்தும் வழி முறைகளை நாம் உருவாக்கி கொள்ள வேண்டும்.

**3.உங்களுடைய ஆரோக்கியத்தை நீங்களாக கவனித்தல்**

தங்களுடைய ஆரேக்கியத்தைக் கவனிப்பது ஒவ்வொருவருடையதும் பொறுப்பாகும் இது வெறுமனே சுயநல எண்ணத்திற்கு அப்பால் நலம் பற்றிய பொறுப்புக் கூறல் ஆகும். நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அப்பால் நோய்கள் ஏற்படாது ஏற்பட்ட நோய் மேலும் பாதிப்புறாமல் பாதுகாப்பது ஒவ்வொரு வரதும் பொறுப்பாகும்

**4.அடையக் கூடிய இலக்குடன் வாழ்தல்**

பேராசை நிறைந்ததும் சாத்தியப் படாதது மான இலக்குகள் சிறுசிறு இலக்குகளாக கொண்டு அவற்றை அடைவதற்கான முயற்சியினை மேற்கொள்ளும் போது அதன் சாத்தியப்பாட்டுத் தன்மையும் அதிகரித்த மனநிறைவினையும் தருகின்றது.

**5.ஆதரவான சமூக வலைப் பின்னலைக் கட்டியெளுப்புதல்**

மற்றவர்களிடம் பரிவினை வெளிப் படுத்தி தன்னலம் மறந்து செயற் படும் பொழுது ஆரோக்பியமான இணைப்பிணை ஏற்படுத்தும் நெருக்கடிகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொண்ட இந்த உறவுப்பின்னல் எமக்கு கவசமாக அமைகின்றது.

**மன ஆரோக்கியம்**

உடல் ஆராக்கியம் பற்றி தேவைக்கு அதிகமாக கவலைப்படும் நாம் நம் மன ஆரோக்கியம் பற்றி சிறிதளவாவது கவனம் செலுத்துவது என்பது இன்றைய வாழ்க்கை முறைக்கு மிகவும் அவசிய மானது அதுவும் வேகமாக மாறி வருகின்ற ஆரோக்கியத்தினை கருத்தில் கொள்ளாத தொழிநுட்ப வளர்ச்சியின் போக்கில் விரைந்து பயணிக்கின்ற இன்றைய உலகில் இதன் தேவை முன் எப் போதையும் விட அதிகமாக காணப் படுகின்றது. அளவுக்கு அதிகமானால் அமுதமும் நஞ்சென்று இருந்த நிலைமாறி அளவோடு உண்ணுகின்ற உணவிலும் நஞ்சு இருக்கிறதாக என்று பரிசோதிக்கின்ற பரிதாப நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.

செய்யும் தொழிலே தெய்வம் என்றிருந்த வாழ்வு மாறிப் போய் அந்தத் தெய் வத்தினையே ஏமாற்றி அதிக பொருள் ஈட்டும் வாழ்க்கை அவலத்தில் அலைந்து கொண்டு இருக்கின்றோம்.

காலையில் எழுந்து பல் துலக்கி முகம், கழுவி,உடல் முழுகி நாம் எமது உடல் ஆரோக்கியத்திற்கு நாம் பாடுபடுகின்றோம் அல்லவா? ஆனால் நாம் காலையில் எழுந்து அன்றைய நாளில் மன ஆரோக்கியத்திற்காக என்ன செய்கின்றோம் என்றால் சந்ததியினரிடம் ஒன்றுமில்லை என்பதே பதிலாக அமைகின்றது.

பூப்பறித்து செபம் செல்லி தொழுது வாழ்ந்த வாழ்க்கை எம்மை விட்டு தூரவே விலகி ஓடிக் கொண்டிருக்கின்றது. இவற்றை வேலைமினக்கீடு என்று ஒதுக்கி விட்டு வாழ்வதனால் ஆரோக்கியமான வாழ்வும் தொலைந்து கொண்டும் செல்கின்றது. இதனால் நாம் பல மணிநேரங்களை சிகிசிசைக்காகச் செலவழிக்கின்றது துர்ப்பாக்கியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பேராசை என்ற பெரும் தரித்திரம் எம்மில் புகுந்து ஆட்டிவிப்பதனால் வியாபரா நிறுவனங்களினதும் விற்பனை முகவர்களினதும் வேடிக்கைக்குரியவர்களாக நாம் அல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடி விளையாடு பாப்பா என்றது மறைந்து போய் கோடி கொடுத்தாவது உயர் கல்வியை கற்க வேண்டும் என்ற இழிநிலைக்கு சென்று கொண்டிருக் கின்றோம்.

இவற்றை எல்லாம் முற்றாக புறம் தள்ளி விட்டு சன்னியாசி போல் வாழ முடியாது தான் ஆனால் எமது வாழ்க்கை நிகழ்வுகளை எமது கட்டுக்குள் கொண்டு வர வேண்டியது அவசிய மல்லலா? இதனை ஏற்படுத்திக் கொள் வதற்கு திடமான மனம் அவசிய மாகின்றது.

இத்தகைய மனதினை பெற்றுக் கொள்வதற்கு நாம் செய்யக்கூடியவை இரண்டு வகையானவை.

1.தன்னக விழிப்புணர்ச்சி

2.பிறநல உறவிணைப்பு

**1.தன்னக விழிப்புணர்ச்சி**

உன்னையே நீ அறிவாய் என முன் னோர்கள் கூறியதற்கு இனையாக தன்னைப் பற்றிய அகநோக்கு ஒரு மனிதனுக்கு மிக முக்கிய மானதே அதிலும் தனது பலம் பலவீனம் ஊடாகப் தம்மைப் பற்றிய குறை நிறைகளை அறிந்து தன்னை ஏற்றுக் கொண்டு வாழத்தலைப் பாடுவது மிகத் தேவையான ஒன்றாகும்.

தனது எண்ணங்களும் அதன் விளைவான உணர்ச்சி நடத்தை களை புரிந்து கொண்டு வாழத் தலைப்படுவதே அதனை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு வழிசமைக்கும் மனம் போல் வாழ்வு என நம் இலக்கியங் களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

நெருக்கடிக்குள் வாழ்வு தள்ளப்படுவதை சுதாரித்து தனது சகல வளங்களைக் கொண்டு அதனைக் கையாளு கின்ற மனப்பக்குவம் மனித வாழ்க்கையில் அடிப்படையாகும். எல்லை கடந்து சென்று பேராசையினை அடக்கி வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் மனக்கட்டுப்பாடு எமது வாழ்வை பாதுகாப்பதே ஆகும். போதும் என்ற மனமே பொன் செய்த மருந்து என முன்னோர் கூறியுள் ளார்கள்.

**2.பிறநல இணைப்பு**

தனி மனித முதன்மையில் பிணைப்பு வாழ்க்கையே மனிதனின் இயல்பான வாழ்க்கையாகும் காலாகாலம் அதன் பாதுகாப்பில் மகிழ்ச்சியில் வாழ்ந்து தான் பிறருடனே தொடர்பாடல் உரையாடினார் என்பது அவசியமாகிறது கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதனை பழந் தமிழில் உணர்ந்து கூறியுள்ளனர் பிறரை தன் நிலையில் வைத்து அவரை புரிந்து கொள்ளலே இதன் அடிப்படையாகும். பிறர் நிலையில் பார்ப்பதனை தவிர்த்த சமநிலையில், சகோதரத்தில் கருத்திக் கொண்டு உறவாடுவதையே அது குறித்து நிற்கிறது

கூழ் காச்சி வீட்டுக்கோடியில் சுற்றத் தாருடன் சேர்ந்த இனம் தான், இன்று யாரும் தெரியாத சந்தோசத்தை அனுப வித்துவிட துடிக்கிறது இதனால் அவர் போதையில் தொலைந்து பேதையா கின்றார். பன்முகத் தன்மை ஏற்றுக் கொண்டு, மாற்றிக்கொண்டு கொண்டு மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் பரவும் என வாழ்த்தலைப்படும் மற்றவர்களின் கருத்துக்களும் முக்கியத் துவமும் கொடுத்து மற்றவர்களின் கஷ்டங் களிலும் பங்கெடுத்து பலர் விரும்பும் படியாக வாழ்தல் மகிழ்ச்சியை தரவல்லது இல்லையா?

நீங்கள் அண்மையில் மகிழ்ச்சியில் இருந்த விடயத்தை நோக்கினால் சம்பளம் கிடைத்தமை, பணம் கிடைத்தமை பொருள் கிடைத்தமை, சகல உறவு களுடன் திருமண நிகழ்வில் கலந்து கொண்டது திருவிழாவிற்கு கோயிலுக்கு சென்றது நண்பர்களுடன் ஊர் சுற்றிப் பார்த்தது, விளையாடிய போது என்பன நினைவிற்கு வரும். அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்தில் ...த்தர்

எல்லாம் கிடைக்கிறதுதானே ஏன் இப்ப உம் எண்டு இருக்கிறியள்? என்ன இல்லாதது கிடைச்சிட்டுது எண்டு சொல்லுறியள் பாப்பம். நாங்க விதைச்ச விவசாய நிலம் எங்களுக்கு கிடைச்சுதா? இல்ல யாழ் தேவி வந்த நேரம். எங்கட வயித்தில பிறந்த பிள்ளையள சண்டை முடிஞ்ச கையோட கையில் கொடுத்தினமே அதுகள ஏத்திவரகிடைச்சுதா? இல்ல சண்டை முடிஞ்சுதான் ஐந்து வருச மாச்சுதே அடைச் சுவைச்சு விசாரணை இல்லாம சிறையில் வாடுற எங்கட பிள்ளையள் எங்க வீட்டுக்கு யாழ் தேவியில அழைத்துவந்திச்சினமா சொல்லுபாப்பம். இதுகள் வந்திருந்தா உண்மையில மனசவெண்டிருக்கலாம்?

இதுகள அருகில இருந்து குடைபிடிச்சதுகள் கூட சொல்லிகூட்டி வந்திருக்கலாம். படத்துக்குப் பக்கத்தில் நிண்டு பல்லிளிக்கிறத விட்டிட்டு உருப்படியா உயிர்களை பாதுகாக்காம சிஞ்சககுப் போடுற தாளவாத்தியார் மாதிரிதிருஞ்சு கொண்டு ஏதோ கொட்டித் தீத்ததை சொல்லி கொக் கரிக்கினம். உண்மையில மனத்தை வெல்லவேணும் எண்டா மனிசன் உயிர மதிச்சு நடக்க வேணும். உயிர்கள் காவுகொள்ள பால், கஞ்சிவாத்து வெற்றிவிழா கொண்டாடிய வையள் தானே சுற்றுலாவாக வந்து போகினம். இன்றும் என்னத்தய செய்யலாம் எண்டு பாக்கவந்து பல்லிளிப்பை பாத்து போகினம். பாரபட்சம் இல்லை எண்டு சொல்ல முடியுமா? எங்கட உரிமையை நாங்க பெறுகிறதுக்கு எத்தனை கொக்கரிப்புக்கள், வாய்ப்பந்தல்கள் போடினம்.

என சுற்றி நின்றவர்களின் புலம் பல்கள், எழுந்தது காதிலவிழுந்தது. எங்களுக்கு பணமும், உறுதியும்,நகையும் இருந்தென்ன? எங்கட பிள்ளளையள தந்தாபோதும் எண்ட மனக்குமுறல் ஒருபக்கம். தன்னைதானே காட்டி உயர் பதவி வகித்தமுட்டாள் என சுட்டிய பேச்சு பட்டதாரிகள் மத்தியில் தம்மால் தரம் பிரித்து காட்டியது. கொடிபிடிக்கவந்தால் தொழில் தேடித்தருவன்,எனக்கு என்ன செய்வீர்கள் என படி ஏறிவந்த பட்டதாரி களிடத்தில் பரம்பரைஅடிமையாக்க முனைந்த முந்தியநிலை மாறவில்லை. இவர்களை பொதுச் சேவையாளர்கள் பண்பாக பேசத் தெரியாதவர்கள் பதவி ஏறினால் எதைஎல்லாம் கேட்பார்கள். இது மக்களுக்கு சாபக்கேடுதான்.

எங்கட சுய மரியாதையை தொலைச்சுப் போட்டு சுதந்திரத்துக்கு ஆசைப்பட்டா இன்னும் பல சுமை களைத்தான் நாம் சுமக்கவேண்டும். திரும்பும் இடம் எல்லாம் சுற்றுலா விடுதிகள்,மாடிகளாக நம் ஊர் தரகர் மூலம் யார் கட்டுகிறார்கள். அதன் அருகில் எழும் சமூகவிரோத செயல்களில் சிக்கித்தவிக்கப் போகும் சிறுவர், இளையோர் யுவதிகளுக்கு இப்போதே மது போதைப் பொருள் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிவிட்டது. யாரும் கைது செய்யப்படுவதில்லை. அதனை விநியோகிப் பவர்களும், விசாரிப்ப வர்களும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளே என்பதால் சமூகச்சீரழிவுக்கு யாரை நொந்து கொள்வது. திருடராய் பார்த்து திருந்தா விட்டால்,திருட்டை ஒழிக்க முடியாது என்பது போல் தான் வழிகாட்டும் தலைமைகள் வழி தவறிவிட்டால் எதிர்கால சந்ததி என்ன வாகும். சிந்திக்காத சமூகம் சீராக வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை.

மனசுத்தியுடன் செய்யத தயாரானால் மனம் ஆறும்,மனம் மாறும், இதை உணரும் காலம் எப்பவோ அப்பதானே கனவு நனவாகும்.


வேலைவேண்டுமா தம்மிடம் வாருங்கள் ,கொடி பிடியுங்கள்,புகழ் பாடுங்கள் . உங்கள் பட்டமும்,படிப்பும் எதுவும் வேண்டாம். எட்டாம் ஆண்டானாலும் பரவா யில்லை. கௌரவ டாக்டர் பட்டம் பெறலாம். செலவு பத்துப் பதினைந்துபோகும்.சாமசூரி விருதுக்கு இரண்டாயிரம் செலவு செய்தால் போதும். ஜேப்பிவேணுமா? கோப்பி குடிக்க,பாட்டி வைக்க தெரிஞ்சா போதும் பட்டம், படிப்பை, பகட்டாக பேசிபயனில்லை. இப்ப கூட பாரபட்சம் இல்லை. எண்ட சொல்லுக்கு இனம், ,மொழி உரிமை அமைச்சர் ஒருக்கா எல்லா அரசபதவியிலும் எத்தனை வீதம் தமிழர் உண்டு என தரவு எடுத்துபாக்கட்டும் பார்ப்பம். படிச்சுபட்டம் பெற்றதை விட படியேறி கொடிபிடிச்சு பதவி பெற்ற வர்களே அதிகம் என்பதை சமுர்த்தி முதல் சங்கக்கடை வரை, அரச ஊழலும், லஞ்சமும்,பாமரர் முதல் பல்கலைக் கழகம் வரை படிப்பறிவில்லாத நல்லொழுக்க மற்ற பரதேசிகளால் நிரப்பப்படுவதில் தான் பாலியல் வன்கொடுமையுடன் பல குற்ற வாழிகளும் பதவியில் இருந்து புள்ளியிடு கிறார்கள். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு தான் என்பதை அந்த மண்டபத்தில் கூடி இருந்த வர்களுக்கு நாயள் ,பேயள் எண்டு பேசினது ஏறாது நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன எண்ட நிலையில மரத்துப் போய் கட்டித்தழுவிய வையளும்,காலில் விழுந்தவையளும், தங்கடவீட்டில இழப்பில்ல எண்டு தானே தன்மானமிழந்து காலில விழுந்து கும்பிடுபோட்டு சூரியன், சந்திரன் எண்டு சுருண்டுகிடந்தினம். அள்ளி சுருட்டியதில் கிள்ளித் தெளித்தவயைள், தானே மோட்டார் வண்டியும், நகை நட்டுக் களும்,அள்ளி ஏத்தின இரும்புகளின்ரை விலைக்கு அரைவிலையில் வாங்கி வண்டியளக் கூட ஐம்பது ஆயிரமும் மாதக்கழிவுமாக வியாபாரம் செய்து இருக்கினம்.

யாழ்தேவி ஒண்டும் வருவது இலவசமல்ல. இந்தியாவின் கடன் பட்டதை வரவுமீட்டுவிடும் எண்ட நம்பிக் கையிலதானேஇந்தியாகடன் கொடுத்து வாங்குது. றோட்டுப் போட்டம். றெயில விட்டம் எண்டுகதை சொல்லுறதுக்கு தானே அந்த கதிரையிலஇருக்கினம். அது விளங்காத அரசியல் வாதிகள் அருகிருந்து கதை அளக்கிறத பாத்தா சொந்த பணத்தில சொகுசு செய்வது மாதிரி பேசுறது அரசியல் அறிவுமத்திமம் எண்டதை மக்களின் புன்சிரிப்பு வெளிப்படுத்தியது. எதைசெய்தாலும் மனக்காயம் மாற சமநிலை அரசியல் தேவை. இதை இன்றையஅரசியல் வாதிகளிடம் மனம்மாற்றம் ஏற்பட்டாலே நிறைவேறும். மக்கள் தெளிவாய் இருக்கிறார்கள். மாறவேண்டிய மனங்கள் தம் பழைய பல்லவியை சொல்லி ஊருக்கு உபதேசம் உனக்கல்ல எண்டு சொல்லித் திரியிறதில அர்த்தமில்லை. எல்லாம் இருட்டில் தெரியாது வெளிச்சத்துக்கு வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை!



ஒரு தட்டுச் சோற்றுக்காய்-நான்
ஓராயிரம் படிகள் ஏறிவிட்டேன் - என்
தட்டில் விழுந்தது, பிச்சை அல்ல.. வீட்டவன்
என்னில் சிந்திய எச்சில்!!!

பெற்றவனை நினைத்தால் - பெரிதும்
கிடைக்கும் என்பர் - நானும் தான் அழைக்கிறேன்,
"அம்மா. தாயே.! ஏன்று, - ஆனால்
என்னைப் பிள்ளையாய்ப் பார்ப்போரில்லை..
பிழையாகவே பார்க்கிறார்கள்..

உடுத்த ஆடையில்லை
உண்ண உணவில்லை - இந்த
உலகையே உறையுளாய் நினைத்தேன்,
உலகத்தான் உதவா விட்டால்
உற்றவன் என் செய்வேன்???

நானோ வசதியின்றி,
வறுமையில் வாடுகின்றேன் - ஆனால்
வறுமையோ என்னிடம்
வசதியாய் வாழுகின்றது!

படைத்தவன் நீயே!
அதிலொன்று நானே!
நினைத்து நீ மனமிறங்கு- இல்லையேல்
நிரந்தரமாய் எனைத் தூங்கவிடு! உன்
படைப்புக்கு அஞ்சி அஞ்சி நான்
தினம் தினம் பரிதவிக்க
பாவி நான் வலியல்ல.!

-செல்வி.கபிபுல்லா-சனுஜா-


முகிழ்நிலை ஆசிரிய மாணவி
2ம் வருடம் தேசிய கல்வியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய பரப்பில் மறுதலிக்க முடியாத பதிகை (பவள விழா சிறப்புக் கட்டுரை)

– கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் –



கலை என்பது மனித சமூகத்தின் மகத்தான படைப்பு. இப் படைப்பாற்றல் கொண்டு விளங்கும் மனிதன் பரவசப்படுகின்றான், பக்குவப்படுகின்றான், பலசாலி யாகின்றான், பார்போற்ற புனிதனா கின்றான். காலத்திற்கும், கலாசாரத் திற்கும் ஏற்ப மனிதன் கலைகளைப் படைக்கின்றான். அழியாப் புகழ் பெறும் கலை வடிவங்கள், தமக்கான முகவரியை இன, மத பேதமற்ற வகையில் பரவலாக்கி கொள்ளும்.

அந்த வகையிலே கலை வழியே இறை பணியாற்ற, இளவாலை மண் ஈன்ற கிறிஸ்தவ சமயத் துறவியே, நீ.மரியசேவியர் அடிகள் இந்தியக் கலை வரலாற்றில், திருச்சி கலைக் காவிரி கலைக் கல்லூரி யையும், அருட்பணி எம்.எஸ்.ஜோர்ஜ் அடி களாரையும், ஈழத்து கலை வரலாற்றில் திருமறைக் கலா மன்ற கலை வளாகத் தையும், கலைத்தூது நீ.மரியசேவியார் அடிகளாரையும் கலை உலகின் இரு கண்கள் எனலாம்.

இவர்களை விடுத்து, இவ் விரு கலை வரலாற்றினையும் செப்பனிட முடியாது என்பது யதார்த்தம். கத் தோலிக்க ஈழத்தமிழ் வித்தகர் களான சுவாமி ஞானப்பிரகாசகர், தனிநாயகம் அடிகளார், தாவீது அடிகளார், இவர்களின் வரிசையில் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர் சவரிமுத்து சுவாமி ஆவார். கலைப் புலமையும், தமிழ்ச் செழுமையும், சமய ஞானமும், பன்மொழித் தேர்ச்சியும், ஆய்வுத் திறனும் ஒருங்கே கைவரப் பெற்ற, கலாநிதி கலைத்தூது நீ. மரியசேவியர் அடிகள், கலைக் கென கருவறை அமைத்து இன, மொழி மற்றும் சமயம் கடந்த நிலையில் பல பிரசவகங்களை கால மாற்றங்களுடன் உள்ளத் தூய்மை கெடாது பிரசவித்தவர். தொடர்ந்தும் பிரசவித்து வருகிறார்.

கலைக்கென பாலம் அமைத்து ஈழத்தமிழ் கலை வடிவங்களை ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு கலைத் தூதாக கொண்டு செல்ல பெரும் பயணங்கள் மேற் கொண்டவர். தன் சீடர்களுடன் ஈழத்து கலை இலக்கியப் பரப்பில் தனித்துவம் மிக்கதாகப் போற்றப்பட்ட பல படைப்புகளுக்குச் சொந்தக் கா ரரான அடிகளார், அமைதியாக செழுமையான கலைபற்றி பணியாற்றி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருகின்றமை கலை வரலாற்றில் சிறப்பான பதிவுக்கும், பார்வைக்கும் உரியது. பன்முக ஆற்றலும், கலை வடிவங்கள், கலைஞர்கள் மீதான பேரன்பும் மிக்க இவர், திருமறைக் கலா மன்றம் என்ற கலைக்கான நிறுவனத்தை நிறுவி கடந்த ஐந்து தசாப்தங்களாக மிகச் சிறப்பாக வழி நடத்தி வருகின்றார். கலை வலையமைப்பை ஏற்படுத்தி, இலங்கையில் 20 ற்கும் மேற்பட்ட இடங்களிலும், ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் 12 இடங்களிலும் பெரும் கலைக் குடும்பத்தினை தோற்றுவித்து அதனூடாக, கலைப் பண்ணையில் கலைஞர்களை வளப்படுத்தியும், வலுப்படுத்தியும் வருகின்றார்.

03.12.1939 இல் பிறந்த இவர், சிறுவயது முதல் கலை மீதே தணியாத மோகம் கொண்டவர். தன் 7 வயதில் அரங்கை அலங்கரிக்க ஆரம்பித்தவர், தொடர்ந்து நாடகங்கள் மற்றும் நாட்டுக் கூத்துகளில் பங்கு கொண்டவர். 1952 இல் குருத்துவப் பணிக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணிக்க ஆயத்தமானர். 1956 இல் குருத்துவ மேல் நிலைப்படிப்பைத் தொடர கண்டி, அம்பிட்டிய குரு மடத்தில் இணைந்தார். 1958 இல் இறையியல் உயர் பட்டம் பெறும் பொருட்டு, றோம் நகருக்கு சென்றார். அங்கு இறையியலில் இளமானி முதுமாணிப் பட்டங்களைப் பெற்ற துடன் 1960 மற்றும் 1961 காலப் பகுதியில் றோம் தமிழ்ச்சங்கத் தலைவராகவும் பணியாற்றினார். தனது 22 ஆவது வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1972 இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் பட்டத்தையும், 1974 லண்டனில் வரலாற்றில் கலாநிதி பட்டத்தையும் பெற்றார். 1979 இல் ஜேர்மனிய Passau பல்கலைக்கழகத்தில் ஜேர்மன் மொழியைக் கற்றதுடன், அம் மொழியில் சைவ சித்தாந்த ஆய்வினை மேற் கொண்டு, பிறிதொரு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக கலைப் பணியாற்றி வருகின்ற கலாமன்றமும், அதன் இயக்குனரான கலைத்தூது, நீ.மரிய சேவியர் அடிகளும் ஈழத்தமிழ் கலைப் பாரம் பரியத்தில் மிகப் பெரிய இடத்தைத் தக்க வைத்துள்ளமை கண்கூடு. இதனை கலைஞர்களும், கலை ஆர்வலர்களும் பல்வேறு இடங்களில் எடுத்தியம்பி யுள்ளனர். ஈழத் தமிழ் கலை இலக்கிய வரலாற்றை ஆய்வுக்கு உட்படுத்தினால், பல அத்தியாயங்களை தனதாக்கிக் கொள்ளும் வல்லமையும், சிறப்பும், தனித்துவமும், ஆளுமையும், கலைச் செழுமையுள்ள ஒரு கலைக் குடும் பத்தைக் கொண்டதே திருமறைக் கலா மன்றம்.

திருமறைக் கலா மன்றம் என்ற பண்ணையிலே வளர்த்தவர்கள் என்ற அடையாளத்துடன் பல கலைஞர்கள், படைப்பாளிகள் தோற்றம் பெற்றுள்ளனர். கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகளாரால் புடம் போடப் பட்டவர்களே இலங்கை யிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் திருமறைக் கலா மன்றம் என்ற கலை விருட்சத்தை அதன் விழுதுகளாக நின்று வழி நடாத்தி வருகின்றனர். ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் மொழிகளில் ஐந்து நூல்களை எழுதியுள்ள அடிகளார், நகையகம் என்ற மொழி பெயர்ப்பு நாடக நூலையும் வெளியிட்டுள்ளார். அரங்க, வானொலி நாடகங்கள் மற்றும் மௌன நாடகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் பல நாட்டுக் கூத்துக் களையும் எழுதியுள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படுகின்ற கலை, இலக்கிய இதழான, கலைமுகம், சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், மன்ற அரங் காற்றுகைகள், வெளியீடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளிற்கு ஆலோச கராகவும், மேற்பார்வை யாளராகவும் கலைப் பணியாற்றி வருகின்றார் கலைத் தூது நீ.மரியசேவியார் அடிகளார். கலைவழியே இறைபணி தமிழர் கலாசாரத்தில் பல இடங்களில் ஒன்றித்துள்ளது. இறைவனை கூத்தனாக நம் முன்னோர் கண்டு மகிழ்ந்தனர். இசையால் இறைவனை கிறுங்க வைத்த புராணங்களும், தேவ அடியார் தனது அபிநயத்தால், இறைவனை அமைதி யடையச் செய்த கதைகளும் நிறையவே உண்டு. தவிர, தமிழ், முத்தமிழாக, இயல், இசை, நாடகமாகவே வளர்ந் துள்ளது. பண்ணோடு பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், ஆடலால் ஈர்க்கப்பட்ட சிலப்பதிகாரம். ஆண்ட வனுக்கே அர்ப்பணமான மணிமேகலை ஆகியன, கலைவழி இறைபணிக்கு சான்றாகின்றன இறைபணி என்ற வகையில் திருமறைக் கலா மன்றம் நிறையவே சாதித்துள்ளது.

இறை பணி என்பதனை வெறுமனே சமயப்பணியாக கொள் ளாது துன்புறும் மானிடனுக்கு உதவுவதும் அமைதிக்காக உழைப்பதும் இறைபணியே எனக் கொண்டு பல்வேறு சமூக மேம்பாட்டுப் பணிகளை ஆற்றி வருகின்றது ஈழத்தில் திருப்பாடுகளின் நாடக வரலாற்றில் மிக முக்கியமான வராகத் திகழ்பவர் அருட் தந்தை நீ.மரியசேவியார் அடிகள். ஐரோப் பாவில் தோன்றிய இந் நாடக மரபை, தமிழுக்குரிய தனித்துவத்துடன், தத்தெடுத்துக் கொண்டவர் இவர்.

பாஸ் (திருப்பாடுகளின் காட்சி) என்றால் அது சவரிமுத்துச்சாமியின் 'பாஸ்' என்று கூறும் அளவுக்கு, அச்சடங்கு நிகழ்வை ஜனரஞ்சகமான முறையில் மக்களுடன் மக்களுக்காக மேடை ஏற்றினார். தொடர்ச்சியாக 50 வருடங்களாக இப்பணியினை மேற் கொண்டு வரும் இவர், சுமார் 25 பிரதிகள் வரை எழுதி நெறியாள்கை செய் துள்ளார். அன்பில் வளர்ந்த அமர காவியம், கல்வாரியில் கடவுள், கல்வாரிப் பரணி, செந்தணல், சிலுவை உலா, மலையில் விழுந்த துளிகள், அமலன் காட்டிய வழி, சாவை வென்ற சத்தியன், கலவையின் எல்லை, பலிக்களம், களங்கம், இருளுக்குப் பின், கடவுள் வடித்த கண்ணீர், கல்வாரிக் கலம்பகம் கவிநாயகன் கடந்த வருடம் கூட இவர் எழுதிய "வேள்வித்திருமகன்" பெரும் வரவேற்பினைப் பெற்றது. போன்ற பிரதிகள் மிக முக்கியமானதும் அதிக தடவை அரங்கு கண்டவையாகும்.

கலைப்பயணங்கள் மூலமாக மனித நேயமிக்க சமூக உறவை கட்டி யெழுப்ப அர்ப்பணிப்புடன் பணி யாற்றி யவர். தொடர்ந்தும் பணியாற்றி வரு கின்றார். திருமறைக் கலா மன்றத்தின் கலைஞர்களுடன், ஈழத்தவர்களின் பாரம்பரிய கலை வடிவங்களையும், மக்களது துயர்களையும் வடலிக்கூத்தர் என்ற பெயிரில் ஐரோப்பாவிற்கு பல தடவைகள் அழைத்துச் சென்றுள்ளார். வடலிக் கூத்தரின் பரதநாடகங்கள் உலகின் பெயர் பெற்ற கலையரங்கு களில் பல காட்சிகள் கண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகச் சிறந்த இயக்குனர்களை அறியவும், அவர்களது கலை நயத்தை நயக்கவும் வழி ஏற்படுத்தியமை, ஜீவப் பிரயத்தனம் என்ற ஆற்றுகையின் ஊடாக ஈழத்தமிழர் ஆன்மாக்களைத் திறந்து, வெளிப்படுத்திய கலைப் படைப்பு பெரு வெற்றி பெற்றது. மனிதத்தில் இருந்த பற்றுருதி காரணமாக தாயகத்திற்கும், புலம் பெயர்வு புலத்திற்கும் இடையே, ஈழத் தமிழ் கலாச்சாரத்திற்கும், ஏனைய கலாசாரத்திற்குமிடையே கலைத்தூது மட்டுமின்றி, கலாசார தூதனையும் மேற்கொண்டுள்ளார். இவர் கலைத் துறைப் பணியினை நன்கறிந்த ஜேர்மன் ஆன்மீகப் பணியகம் இவருக்கு "கலைத்தூது" என்னும் பட்டத்தை 1998ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளது.

கலைப்பாலம் நிகழ்ச்சியினூடாக தென் இலங்கை கலைஞர்களுடன் இணைந்து, அவர் படைத்து நெறியாள்கை செய்த மௌன நாடகங்களான அசோகா, தர்ஷனா,

ஆகிய ஆற்றுகை களினால், இன ஐக்கியம் ஏற்பட்ட துடன் சமூகங்ளிடையே பரஸ்பர நம்பிக்கையுடன் கூடிய நல்லுணர்வு வளர்க்கப்பட்டது. அது இன்று வரைத் தொடர்கின்றது. பல்துறை வித்தகரான அருட்தந்தை கலைத்தூது நீ.மரியசேவியார் அடிகள் கலைக் கெனவே தன்னை அர்ப்பணித் தமைக்கு, கலைத்தூது அழகியல் கல்லூரியின் செயற்பாடுகள் சான்றா கின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள கலைத் தூது அழகியற் கல்லூரி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் கலைகாவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து பரத நாட்டிய உயர்பட்டப் படிப்பினை கடந்த நான்கு வருடமாக மேற் கொண்டு வருகின்றது.

தனியார் அமைப்பு ஒன்று பரதநாட்டியத்திற்கான உயர் கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்த சிறப்பும், தனித்துவமும் திருமறைக்கலா மன்றத்தையும் அதன் இயக்குனரையுமே சாரும். கலைத்தூது அழகியற் கல்லூரியில் நுண்கலைத்துறைசார் வகுப்புக்கள் மற்றும் அரங்கியல் வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பல விருதுகளுக்கும், கௌரவங்களுக்கும் சொந்தக்காரரான அருட்தந்தை கலைத்தூது நீ.மரியசேவியார் அடிகள் மிக அமைதியாக ஆர்ப்பாட்டம் இன்றி, கலைப் பணியாற்றி வருகின்றார்.

ஈழத்து கலை, இலக்கிய, அரங்கியல் புலம் மட்டுமின்றி, புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் புலங்களிலும் தான் சார்ந்த கலை வலையமைப்பை ஏற்படுத்தி, தனது சீடர்களுடன் மிகச் சிறப்பான முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.அது மட்டுமின்றி 75வது அகவையில் அகம் நிறைந்து அவரை வாழ்த்துவதும் அவர் பணிகளை எடுத்துரைப்பதும் கலை உலகின் கடமையாகும்.

தமிழ் கலைப் பயணத்தில் மிக நேர்த்தியான தடங்களைப் பதித்துள்ள அருட்தந்தை கலைத்தூது நீ.மரிய சேவியார் அடிகள், ஈழத்து கலை, இலக்கியப் பரப்பில் மறுதலிக்க முடியாத பதிகையைப் பெற்றுள்ளார்.

**காவலூர் இ.விஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத் தமிழ்ப் பெண்ணே!

-புலோலியூர் வேல்நந்தன்-



பெண்ணே-ஈழத்
தமிழ்ப்பெண்ணே
ஆடைகளால்
உன்னை
அடிமைப்படுத்தென்று
கேட்கவில்லை
அலங்கோலப்படுத்தாதே
என்றுதான் கேட்கிறோம்.
எத்தனை
ஆச்சரிய மாற்றங்கள்
எங்கள் பெண்களின்
ஆடைத் தெரிவுகளில்
தாய் யார்
மகள் யார்
எதுவுமே புரியவில்லை
எம் தமிழ் முற்றத்தில்
பண்பாடு சிறக்க
வாழ்ந்த உன்
மதிப்பெங்கே
போனது பெண்ணே
ஆடை குறைக்கும்
சமந்தாக்கள்
திரைப்படங்களில்
மட்டுமல்ல
எங்கள் வீதிகளிலுந்தான்
என்ன செய்ய
அனுமதிகள்
கால மாற்றத்தின்
சுய பிரகடனமாகும்
வாழ்வொன்றில்
கட்டுப்பாடுகளை
இழந்தபடி
சுதந்திரம்
காற்றில் பறக்கிறது



# தாய்மை

A.தனுசனா உயர்தரம் (2015)
யா/யாழ் வேம்படி மகளிர் கல்லூரி

பெண்மைக்கான முதல்
மதிப்பு!
உனக்கு மட்டும் தான்
அதனால் தான்
ஆலயத்திற்கு
நிகராக உன்னை
உயர்த்துகின்றார்கள்!
நீ பட்ட துயர்
நாம் பெறக்கூடாது
என்பதற்காகவே
உனது ஒவ்வொரு செயல்களும்
நகரும்!
அதற்காக பத்து மாதம் அல்ல
பத்து வருடங்கள் உன்
வயிற்றுக்குள் சிசுவாக
இருந்தாலும் எனக்கு
சந்தோசம் தான்!
அதனால் மறுபடியும்
பிறக்க விரும்புகின்றேன்
உனக்கு தாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளிராதது!

சிறுவர் கதை

கோகிலா மகேந்திரன்

மாருவின் கால்கள் குளிரத் தொடங்கிய போது தான் பிரச்சினையே உருவாயிற்று அவர் பெயர் மாலதி "மாலு" என்று வீட்டிலே செல்லமாக அழைப் பார்கள். இரவு படுக்கப்போகும் நேரத்தில் மாலு சிணுங்க ஆரம்பித்தால் அப்பா இன்னும் வேலையில் இருந்து வீட்டுக்கு வரவில்லை. நேரம் இரவு ஒன்பது மணியாகிறது.

"நான் இன்டைக்கு நித்திரை கொள்ள மாட்டன் எனக்கு கால் குளிருது" கோபத்துடன் கத்தினாள் மாலு.

"நேரத்துக்குப் படுக்க வேணும்" அம்மாவும் விடுவதாக இல்லை. "எனக்கு கால் குளிருது" அடம்பிடித்தாள் மாலு. அம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆறுதலாக ஒரு கொட்டாவி விட்டுக் கொண்டாள்.

"உடம்பைச் சுருட்டிக் கொண்டு படு நான் காலை உருவி விடுகிறன் கம்பளிப் போர்வையால போத்து விடுறன்"

அம்மா தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள். அப்படியே செய்துவிட்டு அம்மா தன் பாட்டில் நித்திரையாகிப் போனாள். வெளியே கார்த்திகை மழை பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தது. மாலுவும் கண்ணை மூடினாள். நித்திரை வரவில்லை.

மாலுவின் விளையாட்டுப் பொம்மை மகள் நிலைமையைக் கண்டு கவலை அடைந்தன.

"நாங்கள் மாலுவை எங்களோடை கூட்டிக்கொண்டு போவம் அவளின் கை கால் குளிர் மாற ஏதாவது செய்வம்" என்று பொம்மை முயலிடம் கூறியது பொம்மை யானை.

பொம்மை முயல் மாலுவின் படுக்கையின் துள்ளி ஏறி மாலுவின் கையைப் பிடித்து உலுப்பியது. அவள் கண்களைத் திறந்து பார்த்தாள்.

"என்ன வேணும் முயல்குட்டி" என்று கேட்டாள். "எனக்கு ஒண்டும் வேண்டாம் நீ எங்களோட வா நாங்கள் உன்னர கால் குளிர் மாறப் பண்ணுவம்" என்று கூறிக் காதை ஆட்டியது முயல்.

மாலு படுக்கையை விட்டுக் குதித்தாள்.

"நான் வேற நல்ல உடுப்புப் போடவேணுமா? அம்மாவுக்குச் சொல்ல வேணுமா?" என்று கேட்டாள்.

"ஒண்டும் வேண்டாம் உன்ரை உடுப்பு அழகாகத் தானே இருக்கு நீ இப்படியே வா. அம்மா எழுப்ப முதல் நாங்கள் உன்னைக் கொண்டந்து விட்டுவம்" என்றது முயல்.

முயலின் தலைமையில் பயணம் ஆரம்பம் ஆனாது. இராணுவ வீரனின் உடுப்பு போட்ட பொம்மை, யானை பொம்மை, ரெடி பெயர் "சீனு" என்று மாலுவால் அழைக்கப்படும். பொமமையினை பிள்ளை பொம்மை மணியடிக்கும் குரங்குப் பொம்மை மாலுவுடன் புறப்பட்டனர்.

விரைவாக நடந்து ஒரு சிறு கதவடிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தனார். யானை பொம்மை கதவை தட்டிய போது சிரித்துக் கொண்டு ஒரு தேவதை கதவை திறந்தது. தேவதை போட்டிருந்த அழகான நிலம் கூட்டும் நீல நிறச் சட்டையின் அழகான மேல் இருந்து கீழாக பவுண் தெறிகள் போடப் பட்டிருந்தன. தேவதையின் அழகான நடையை பின்தொடர்ந்து அனைவரும் பெரிய அழகான மண்டபத்திளுன் நுளைந்தனர்.

மாலுவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அறையைச் சுற்றி ஆயிரக் கணக்கான விளையாட்டு பொம்மைகள் அடுக்கப்பட்டு இருந்தன. “இதெல்லம் யாருக்கு?” என்று விரிந்த கண்களுடன் கேட்டாள் மாலு.

“ஒரு விளையாட்டு பொம்மையும் வாங்க வசதியில்லாத பிள்ளைக்கு யார் கொடுத்தது என்று தெரியமையே கொடுங்க...” என்று தேவதை கண் சிமிட்டிய படி பதில் அளித்தது.

“யார் கொடுத்தது என்று தெரியாமல் எப்படி இஞ்ச வந்தது?”மாலு விடாப்பிடியாக கோட்டாள்.

“நல்ல உள்ளம் படைத்த பெரிய மனிதர்கள் எங்களுக்கு பார்சல் மூலம் அனுப்புவார்கள். யார் அனுப்புவது என்று எங்களுக்குத் தெரியது. நாங்களும் குழந்தைகளுக்குப் பார்சல் மூலம் அனுப்புவோம்”

என்று கூறி தன்தோகையை விரித்தது தேவதை.

“தேவதை பறக்கப்பேககிறதே ?” என்று மாலு நினைக்க முதலே” மீண்டும் தோகையை மடித்துவிட்டு

“சரி இப்போது நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்”என்று கேட்டபடி மாலதிக்கு அருகில் வந்தது. தேவதையின் உடலில் வீசிய நறுமணம் அவளை கிறுங்க வைத்தது.

“என்னட்டை நிறைய பொம்மை இருக்கு “நான் ஏழைப்பிள்ளை இல்லை” என்று உண்மை கூறினாள் மாலு.

“நீ அரிச்சந்திரன் போல இருக்கிறாய் உன்னை எனக்கு பிடிச்சிருக்கு” என்று கூறிய தேவதை தொடர்ந்தது”

“உன்னட்டை அளவுக்கு அதிகமாய் பொம்மை இருந்தால் அதில ஒண்டி ரண்டை எங்களுக்குத் தரலாம்” என்றது.

“தருவேனே!”என்று முறுவலித்தாள் குழந்தை.

“சரி நீ நல்லை பிள்ளை இப்போது நீ இங்கே உள்ள பொம்மைகளோடு விளை யாடலாம்” என்றது தேவதை.

முன்பக்கம் பூனையின் முகம் கீறப்பட்ட மெத்தென்றிருந்த சப்பாத்துச் சோடி ஒன்றை எடுத்துத் தன் காலை அதற்குள் நுழைத்தாள் மாலு அவருடைய கால் சப்பாத்தைவிடச் சிறிதாக இருந்ததால் நடக்க முடியவில்லை. கால் குளிராக வேறு இருந்தது. அதைக் கழற்றி விட்டு ஒரு சோடித் தவளைப் பொம் மைக்கு அருகில் போனாள். பச்சைப் பிளாஸ்ரிக்கால் செய்யப் பட்டிருந்த தவளைகளுக்கு ஒரு பக்கத்தில் சாவி இருந்தது சாவியை முறுக்கி விட்டாள். அவை மாலுவின் பாதங்களில் ஏறிக்குதித்து விளையாடின.

“நல்லா இருக்கு” மாலு மலர்ந்தாள் கால்கள் கொஞ்சம் வெப்ப மாகி உணர்வு ஏற்பட்டது. தவளைகள் குதிப்பதை நிறுத்தியவுடன் கால்கள் மீண்டும் குளிர்ந்து கொண்டன.

உடல் முழுவதும் நிறைய இறகுகளைக் கொண்டிருந்த குயில் பொம்மைக்கு அருகில் போனாள். அது தனது இறகு களால் மாலுவின் காலை வருடித் தேய்த்து விட்டது. சிறிது நேரம் நன்றாக இருந்தது. திரும்பவும் கால் குளிர்ந்து விட்டது.

“என்னுடைய நடனத்தைப் பார் மாலு” என்று சொல்லி ஒரு தஞ்சாவூர் பொம்மை ஆடத் தொடங்கியது தன்னை மறந்து அந்த நடனத்தைப் பார்த்தபடி இருந்தாள். மாலு அவளுக்குத் தெரியா மலே கால்கள் சூடேறிவிட்டன.

“கால் குளிரேயிலை” என்று சொல்லிக் கொண்டு கீழே பார்த்த போது ஒரு ஒட்டகப் பொம்மை அவளின் காலுக்கு மேல் படுத்துக் கிடந்தது.

“உனக்கு முதுகிலை ஒரு “சிப்” இருக்கு என்னத்துக்கு?” என்று கேட்டாள் மாலு

“பொதி சுமக்க” என்று அழுதது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மை பிறகு "நான் பாலை வனத்தில் இருக்கிற ஆள் எப்பவும் சூடா இருப்பின் பாலை வனத்திலை நீர் கிடைக்காது. கானல் நீர்தான் தெரியும் .என்று செல்லுவினம். ஆனால் நான் உனக்குத் தந்த வெப்பம் கானல் நீரா மறைந்திடாது" என்று கூறிப் பல்லைக்காட்டியது.

சற்று நேரத்தில் மாலுவின் கால்களிலேயே நித்திரையாகிப் போய் விட்டது.

"உனக்கு இந்த ஒட்டகத்தைப் பிடிச்சிருக்கா?" என்று கேட்டது.

"ஓ" என்று சிரித்த மாலு தனது கால்களில் குளிர் போய் விட்டதை உணர்ந்தாள்

"காலையில் எழும்பின உடனை ஊத்தை உடுப்புக்களை எல்லாம் ஒட்டகத் தின்ரை "சிப்பை" இழுத்து அதுக்குள்ளை போட்டு வைக்கலாம்" என்று கூறியது தேவதை ."அப்படியா?" என்று கேட்ட மாலு,

"நான் என்ர இராணுவ வீரன் பொம்மையையும், ரெடி பெயரையும் உங்களுக்குத் தரப்போறன் பொம்மை இல்லாத பிள்ளைகளுக்குப் பார்சலிலை அனுப்புங்கோ" என்று முடித்தாள்.

நன்றியும் வணக்கமும் கூறி விட்டுத்தன் அணியுடன் புறப் பட்டாள் மாலு. முயல் பொம்மையின் தலைமையில் யானையும் குரங்கும், சீலுவும் மாலுவுக்குத் துணையாக வந்தனர். விடிய முதலே எல்லோரும் வீட்டுக்குள் நுழைந்து விட்டனர். மாலு தன் கட்டிலில் போய்ப்படுத்துக் கொண்டாள். அம்மா இன்னும் எழுந்திருக்கவில்லை.

சில நாட்களின் பின் மாலுவுக்கு ஒரு பார்சல் வந்தது. அதில். ஒரு ஒட்டகப் பொம்மை முதுகில் "சிப்" புடன் இருந்தது.

மாலுவுக்கு இனிக்கால் குளிராதே!

(இந்தக் கதையைப் படிக்கும் பிள்ளைகள் கானநீர் என்பது என்ன என்பது பற்றியும் அரிச்சந்திரன் யார் என்பது பற்றியும் ஆசிரியரிடம் கேட்டு அறியலாம்)

## எதிர்காலப் பிரஜையின் பாடல்

**இன்னும் மலராத் தேசமொன்றில்**
**இருந்து வந்தவன் நான்**

**இங்கு பிறந்தது நான் மட்டுமல்ல**
**நீ மட்டுமல்ல**
**நாம் சகோதரர்கள்.....**

**தருதற்கு கைநிறைய**
**அன்புண்டு என்னிடத்தில்**
**"நானாய்" நிறைந்த**
**அன்பைவிட ஏதுமில்லை**

**என்னிடம் ஓர் இதயமும்**
**அழுகைகளும் உண்டு**
**ஆனாலும் அவை**
**என்னது மட்டுமல்ல**

**இன்னும் மலராத் தேசமொன்றில்**
**இருந்து வந்தவன் நான்**

**தருதற்கு நிறைய**
**அன்பினைத் தாங்கிய நான்,**


**இன்னும் மலராத் தேசமொன்றின்**
**பிரஜைகள் பலருள் ஒருவன்**

ஜொஸி கரவெரின்ஹா
**(Jose Caraverinha-1922)**
மொஸாம்பிய கறுப்புக் கவிஞர் பத்திரிகையாளர் African Writing today போன்ற பல தொகுப்புக்களில் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

தமிழாக்கம் :
**என்.சண்முகலிங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# -முடிவுறல்-

-சிறுகதை-

கை.சரவணன்

"எல்லாம் முடிந்தது."

"எல்லாமே முடிந்ததா?எல்லாமேயென்றல் எவை யெவை??"எக்காளச் சிரிப்புத் தடவிய அகங்காரச் சிரிப்பொலிக்கு யார் உரிமையாளராயிருப்பாரோ? மீண்டும் முதலில் சொல்லப்பட்டதே இப்போதும் "எல்லாம் முடிந்தது".

கேட்டகுரல் போலிருக்கிறதே.... யாரா யிருக்கும்?எக்காளமிட்டுச் சொல்லும் படிக்கு முக்கியத்துவமானதையா சொன்னது...பழகியகுரல்?...யாரது குரல்?

முடியுமான அளவுக்கும் அதி கமான இருட்டுக்குள் எதுவும் தெரிய வில்லை. ஆலம் வித்தளவு புள்ளியிடுமளவு கூடஒளியறுந்த பயங்கர இருட்டு. யார் சொல்லியது...யாருக்குச் சொல்லியது.. சொன்ன இரட்டைச் சொற்களும் எனக்காகச் சொல்லப்பட்டதா அல்லது வேறுயாருக்காகவாயினும் சொல்லப் பட்டது இருட்டில் திசை தப்பி வந்து எனது செவிகளில் முட்டியதா?....சரி. எவருக்காகச் சொல்லப் பட்டதாயிருக் கட்டும். இந்தக் கரியிருட்டினுள் மனிதர் யாரேனுமிருக்கலாமெனும் ஊகத்திற் கூடச் சொல்லப்பட்டிருக்கலாம். அப் படித்தானிருக்க வேண்டும்.

யாருக்காயிருந்தாலென்ன சொல் லட்டும். அப்படி என்னதான் முடிந்தது? ஒன்றா?...இல்லையில்லை பலவாயிருக்க வேண்டும். இல்லாவிடின் எல்லாம் என்பதை அழுத்திக் கூறுவதின் அவசியம் நிச்சயமாய் பலதும் முடிந்திருக்க வேண்டும். அப்படியெனில் அவை எவை? சிலுவையில் தொங்கியபடியே தன்னிறுதி மூச்சுகளை பெருவலியின் வெளிப் பாட்டோடு விட்டபடியே தனது பர லோகத் தந்தையுடன் பேசிய மனுக் குமரன் ஈற்றில் பேசிய வார்த்தைகளுடன் ஒத்ததாக இருக்கிறதே. "தந்தையே எல்லாம் நிறை வேறிற்று" எனும்படியாக இருக்கிறதே... அவன் குரல்தானோ... அல்லது பிரதி யெடுத்து யராகிலும் மீண்டும் உச்சரித் தனரோ? அப்படியிருக்கலாம். பிரதிகளில் உயிர் இருப்பதில்லை... உணர்வுகள் சுண்டுவதில்லை. அப்படித் தானிருக் கலாம். வார்த்தைகளில் இல்லாத வலியும் எகத்தாளமும் அதையே தான் கூறுகின்றன. அப்படியெனில் இந்த நிசப்தம் பூசிய இருளைத் துழைத்து அப்படியேன் கூறவேண்டும்? யாராயிருக்கும்?

சிவாவாயிருக்குமோ? இருக் கலாம்.அவன்தான் குடித்து முடித்து முழுதும் ஏறாமல் போத்திலைக் கவிழ்த்து நாக்கில் பிடித்தும் ஒருசொட்டும் தவழா ததில் வெறுப்பாயிருக்கலாம். வழக்கமாய் அப்படித்தான் நடப்பதுண்டு. ஆனால் நாக்கில் விழாத சொட்டுக்காய் போத்தலை வீசியெறிவானே... அது உடைந்து சிதறும் சத்தம் கேட்குமே... அப்படியொன்றும் கேட்கவில்லையே? இருட்டில் உடைந்த போத்தலின் சிதறுறும் கலீர் ஒலி திசைமாறி வேறெங்காயினும் சென்றிருக்குமோ? அதையிதை விட சுருக்கமாக இரண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகளில் எதையுமே சட்டெனக்கூறும் பழக்கமும் அவனிடத்தில் இல்லையே? யாராயிருக்கும்... அவை எவையாயி ருக்கும்?

சோமராயிருக்குமோ? அவரா யிருக்கலாம். "ஒரு பொல்லாப்பும் இல்லை... எப்போதோ முடிந்த காரியம்" எனும் யோகர் சுவாமிகளின் வார்த்தைக ளோடு வாழ்பவர். ஏதாயினும் செய்யப் போய் எதையாவது செய்து அது இதுவாய்க் குழம்பித்தடுமாறுகயில் காண் போருக்கும் தனக்குமாய்ச் சொல்லும் சமாதானமாய் அடிக்கடி பாவிப்பார். இப்போதும் அவராயிருக்கலாம் ஆனால் இந்த இருட்டுக்குள் அப்படி எதைத்தான் செய்தார்?...எவற்றைத்தான் சொதப் பினார்? ஆனால் இது அவரது அல்ல. அவராயிருப்பின் முழுதாகவல்லவா சொல்லியிருப்பார்...நான்கு வார்த் தைகளை இரண்டாக்கி யிருக்க மாட்டார்.

சரி. முடிகிற காரியமென்று ஏதேனு முண்டா?... முடிவு என்ப துண்டா?... எதுமுடிகிறது? .. "தோன்றுவ து மில்லை. முடிவதுமில்லை"... என்பது பெருமை யோடு சொல்லப்படுகிறவிடய மாயிற்றே!. இயங்கியல் கூறுவதும் இதைத்தானே!... ஓய்ந்திருப்பதாகப் படுகிற பொருட்களும்கூட புவியின் சுழற்சிக்கான வேகத்தைப் பெற்றுத்தானே இருக்கிறது?....ஓய்வு எது.. முடிவு தானேது? இயங்கியலின் யதார்த்தம் வலியுறுத்துவது இதைத் தானே. மறு பிறப்புப் பற்றியநம்பிக்கைகள் எப்படி யிருந்தாலும்-உண்மையாய்...பொய் யாய்..-உயிர்கூட முடிவுறாதது என்பதைத் தானே வலியுறுத்துகிறது. விஞ்ஞானமும் சரி மெய்ஞ்ஞானமும் சரி இயங்கு நிலையை -யன்றி முடிவுறு நிலைபற்றிதும் சொல்லவில்லைத்தானே. நானறிந்து கொண்டவரையில் மெய்ஞ்ஞானம் சொல்கின்ற முத்தி நிலைகூட இறை வனுடன் ஐக்கியமாவதாய்க் கூறுகிறதேயன்றி அதுவே உயிரின் முடிவென்று வரையறை செய்யவில்லை.

"எல்லாம் முடிந்தது"

அதே இருளக் குள்ளிருந்து அதேகுரல். "யாரது? என்னஅது?"பதிலில்லை. முணுமுணுப்- பொன்று மெதுவே எட்டவாகக் கேட்கிறது அல்லது பிரமையோ? இந்த இருட்டுக்குள் முணு -- முணுப்ப தொன்றும் பெரிதல்ல. உண்மை யாயிருக்கலாம்.ஏனெனில் இரண்டு மூன்று குரல்களின் வித்தியா சத்தை இருட்டால் தடுக்க முடியவில்லை.

யார் யாராயிருக்கலாம்?....ஒன்று ஏதொ சொல்ல மற்றொன்றுமறுக்கிறது. இன்னொன்று ஆமோதிக்கிறது. அது மறுதலிப்பிற்கா அல்லது முற்சொல்லப் பட்டதற்கா? அது தெளிவாக இல்லை. பின் "இருக்கிறது" என்கிறதுமுதலாவது. "இல்லை" என்கிறதுமற்றது. "யாருக்குத் தெரியும்?" வினாவாகிறது மூன்றாவது. மூன்றும் யாராயிருக்கும்?

மணிதான் இருக்கென்றிருப்பான். அவனைப் பொறுத்துஅவன் "இல்லை" என்பதையே மறுப்பவன். இல்லா மலிருப்பது கூடஒரு இருப்பு தானே! என்பதில் உறுதி குலையாதவன். முகுந்தன் இவன்தான் "இல்லை" என்றிருப்பான். இவனுக்கு எதிலும் நிறைவில்லை. எல்லோரும் "நல்லது" என்பதை இவன் "அதில் என்ன இருக்கிறது? என்று மறுத்துரைப்பவன். எதிலும் திருப்தி கண்டு ஆமோதிப்பதையே அறியாதவன். மூன்றாவது என் குரல் போலிருக்கிறது. நான்தான் போலிருக்கிறது. அவர்களது குரலோடு என்குரல் இப்போது எப்படி? நேற்றோ அதற்கும் முந்தியதினமோ ஒருமாலைவேளையில் பத்திரிகையில் பொறுக்கியதுகளை அலசியவேளையில் பரிமாறப்பட்ட வார்த்தைகள்தான் இப் போது தாமதமாக வந்திருக்க வேண்டும். இப்போது இந்த இருளக் குள்ளாக இங்கே அவர்கள் வரவாய் பேதுமில்லையே? நாட்கணக்குகள் கடந்தேவார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமளவிற்கிருக்கையில் தனித்து மீண்டும் ஒலித்தது. யாருடைய வார்த்தைகள்.... தலைக்குள் கடமுட வென்ற இரைச்சல். காதுகளைப் பொத்தினாலும்கேட்கிறது. கண்கள் இறுகிப் போயே இருக்க நெற்றி சுள்ளென்று வலிக்கிறது பெருவலி. நாடிகள் நரம்புகளில் சுறுசுறுவென்று மயிர்க் கொட்டிகள் உலவுகின்றன.

"எல்லாம் முடிந்தது" எனுமிடத்தில் மயிர்க் கொட்டிகள் குறுக்கறுத்து ஊர்ந்து சுணைப் பெடுக்கிறது. குஞ்சுகளாக கொஞ்சம் வளர்ந்ததாக முருங்கை பூவரசம் பொந்து என எங்கும் குழமியிருக்கையில் ஓலைப்பந்தத்தால் சுட்டுப் பொசுக்கி பெருமையோட வந்து "எல்லாத்தையும் ஒழிச்சாச்சு" என்று திண்ணையில் உட் காரவும் கூரை யிலிருந்து நூல்விட்டு ஆடுகிறது ஒன்று. அது அவரது பெருமைக்கு விழுந்த கரும் புள்ளியா யெண்ணி குறுகிப் போனார். மறு நாளாயிருக்க வேண்டும் முதுகில் ஒன்றுபட்டுச் சொறி சொறியென்று சொறிந்து முதுகில் காயம். மாமிக்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை. மாமா எரித்ததும் உண்மை... முதுகில் பட்டுச் சொறிந்து புண்ணானதும் உண்மை. மாமா சொன்ன "எல்லாத் தையும் ஒழிச்சாச்சு" தான் உண்மையா? பொய்யா? இல்லை அறியாமையா?

எதுவோ எப்படியோ இருக்கட்டும் எனவிடுவதற்கு முடியவில்லை. இவ்வளவு நேரமும் யோசித்தபின் முடிவு காணாமல் விடவும் முடியவில்லை. முடிவு என்பது எந்தளவு என்பதை முதலில் வரையறுத் தாலன்றி ஆறிக்கொள்ள அவகாச மிருக்காது. "எல்லாம் முடிந்தது" எதிலே தொடங் கியது என்பதைப் பொறுத்து ஒரு எல்லைக் கோட்டை வரையலா மெனில் அந்தக்கோடு கடப் பதையே "முடிவு" எனக் கொள்ளலாமா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

ஓட்டப் போட்டிக்கானதைப் போல் தொடக்கம் - முடிவுபற்றி பிற விடயங்களில் வரையறை செய்ய முடிவதில்லை. "நானும் நீயும் இப்ப கதைக்கிற விசயம் எதில தொடங் கினது...எதில முடியப் போகுது?" சாந்தனின் குரல்லாவா அது? இப்படிக் கிட்டவாகக் கேட்பது உண்மையா? சாந்தன் எப்படி இங்கே வந்தான்... சாந்தன்.. உலகத்துக்கு வந்த நாளோ நேரமோ தெரியாது. ஆண்டை அண்ணளவாகக் கொண்டு வாழ்ந் தான்.தனக்காகவும் வாழ்ந்தான் எனினும் பெரும்பாலும் பிறருக்காகவே வாழ்ந் தான். அவனைப் பொறுத்தவரை அவனுக்கென்றொரு முடிவுத்திகதியும் இல்லை. உத்தேச திகதியாக ஒன்று ள்ளது. அதுவும் கடைசியாய்த் துாரத் தில் யாரோ கண்டதிகதிதான். பின்பு ஒன்றுமில்லை என்பதில் அவனது நினைவுகள் சேராது. அதுநிறைய இருக்கிறது. இப்போது அவனது குரல்தானே விளக்குகிறது.

எல்லாம் முடிந்ததாகக் கூறப் பட்ட குரலிற்கு என்னைத் தவிரவும் யாரேனும் காதுகொடுத்தார்களா? இருட்டு ஒன்றுக்கும் விடுகிறதில்லை. தானே எல்லாவற்றையும் போட்டுப் பொத் திவைத்திருக்கிறது.சத்தத்தையும் அப்படியே செய்திருந்தால் நன்றாயிருந் திருக்கும்.

மறுபடியும் குரல் ஒலித்தால் கேட்கலாம். பதில் வருமோ தெரியாது. எல்லாம் முடிந்தது உண்மையானால் பதில் வரத்தானேவேண்டும். வாயைக் கிளறும் வழியோதெரியாது. முடிந்தா லென்ன முடியா விட்டா லென்ன? புள்ளியளவில் ஒரு மினுக்கம்...அதுவும் பிரமையோதெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்தம் இன்றி நிகழும் யுத்தம்

-ஜோசப்பாலா-

சத்தம் இன்றி நிகழும் யுத்தம் போரின் அழிவுகளை விட குடிபோதையால் ஏற்படும் அழிவுகள் எம் தேசத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்திவருகிறது. இதற்கான திட்டமிட்ட முன் எடுப்புக்கள் நாலாபுறமும் ஆரம்பிக் கப்பட்ட உண்மையை கண்டுமௌனித்து இருப்போர் தம் இல்லங்களில் இவ் அழிவினை கண்டபின்தான விழிப்படை வார்களா?

கடற்கரை வீதியில் நின்ற ஒன்பது வயது சிறுவர்கள் கையில் விளை யாடிக் கொண்டுவாயில் மென்று கொண்டதைப் பார்த்த பெரியவர்கள் "என்ன சாப்பிடு கிறாய்" என்று கேட்ட போது "அண்ணா ஒருவர் தந்திட்டுப் போனார் எல்லாரும் சாப்பிடசொல்லி அதைத்தான் மற்ற வர்களுக்கு கொடுத்து நானும் சாப் பிடுகிறேன்" என பாக்கு சரையைக் காட்டினான் சிறுவன் ஆரம்பத்தில் இலவசமாக விநியோகித்து பழக்கப் படுத்திக்கொள்ள மேற் கொள்ளும் முயற்சிகள் இன்று பாடசாலைகள் அருகிலும், ஆலய திருவிழாக் களிலும் கேளிக்கையாக கூடும் இடங்களிலும் விற்பனையாக்க எம் முற்றத்தில் போதைப் பொருட்களால் நிரப்பி சமுகசீர்கேட்டை வலுவாக்க முனையும் திட்டமிட்ட செயலுக்கு துணைபோகும் வியா பாரிகளும் இதற்கு அடிமையான இளைஞர்களும் மதிமயங்குவதை கண்டும் காணாதவராக இருக்கும். பெற்றோரே, பெரியோரே, பொது அமைப்புக்கள் பிரதிநிதிகளே, சமுகததலைமைகளே என்ன முயற்சி செய்வீர்கள்?.

உயிரை, உடமையை இழந்து மீழ் குடியேறியபோதும் புதியவடிவங்களில் சமூகத்தை சீர்குலைக்க திட்டமிட்ட முனைப்புடன் செயல்படுவதை உங்கள் அயலில் காணமுடிகிறதா? கண்டால் ஏது செய்வீர்?

மக்களின் உறவில் மங்கள, அமங்கல நிகழ்வில் முன் நிறுத்தப்படும் சிறப்பு பொருளாக பயன்படுத்திய வெற்றிலையே இன்று வேற்றிலையாக போதை யூட்டும் பாவனைப் பொருளாக எங்கும் கிடைக்கும் மலிவான பொருளாக மாறி எல்லோர் வாயிலும் வயது பேதமின்றி வெற்றிலையை மெண்டு மயக்கமுறுவதை காண வில்லையா? இவை ஆரம்பபோதைப் பொருள் விற்பனைதந்திரசெயல்களே.

இவை மாணவர்கள் முதல் சாரதிகள் வரை பழக்கப்பட்ட பொருளாய் மயக்கத்தை தூண்டி பல விபரீதங்கள், விபத்துக்களை ஏற்படுத்தும் விளை பொருளாக மேலும் அடுத்த நிலையில் கஞ்சா, பவுடர்,லேகியம்,தூள் என் நீண்டு செல்கிறதை தூண்டும் மதுப்புட்டிகள் ,பியர் ரின்கள்,போதை ஏற்றும் பாக்குகள் இளைஞரைமயக்க வீதியோரத்தில் நடந்தேறும் சமூகசீர்கேட்டின் எச்சங்களாக வெளிவருகிறது.

போதைதரும் உபாதையால் நோயளிகளாக மாறுவோரும்,போதைக்கு பணம்தேடி, வழிப்பறிகொள்ளை, கொலை வரை நீண்டு செல்லவும் மிக துணிச்சலை ஏற்படுத்தி சங்கிலி அறுப்பு,பாலியல் துஸ்பிரயோகம் என வயது பேதமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவை நோக்கி செல்வதே தினசரி செய்திகளாகின்றன.

எம் இளையோர் வேலை யின்றி,கடினவேலைகள் செய்வதில் நாட் மின்றி,தம்மைபற்றிய தூர நோக்குப் பார்வையின்றி நம்பிக்கையற்ற வாழ்வாக சிதைவதைக் கண்டும் காணாதவராக வழிகாட்டதவறும் தலைமைகள், பொது அமைப்புக்கள்,தனவந்தர்கள் சமய நிலையங்கள் சிறுக,சிறுக இளையோரில் ஒருசிலரையாவதுபொறுப்போற்று தூரநோக்குடன் செயல்பட்டால் தான்எம் தேசத்தின் அழிவைத் தடுக்க முடியும்.

பிறர்மேல் பழி சுமத்தித் தப்பித்தலில் ஈடுபடும் நிலைமாறி இளையோரின் வளங்கள் சக்திகளே எம் தேசத்தின் சொத்து என தம் செயல் களினால் எத்தனை இளையோர் புதுவாழ்வு பெறுகின்றனரோ அதுவே உங்கள் வழி காட்டலின் சிறப்பாக, முன்மாதிரிகை யாக எடுத்துக் காட்டும் மறுவாழ்வாக அமையும்.

இன்றைய இளையோரின் நம்பிக்கை ஈன வாழ்வுபற்றி சொல்வதில் அல்ல செய்வதில் காட்டும் முன் மாதிரிளாலே தான் மாற்றத்தை ஏற் படுத்தலாம். வழங்ககொண்ட எம் தேசம்,வாழ்வாதரத்துக்கான நிலம், கடல்,இயற்கை சூழலில் சுயநலமில்லா பொதுநோக்காக இளையோர் மனதில் கூட்டாகவும், தனியாகவும் செயல் படுத்தும் வழிகாட்டிகளையே இன்றைய சமூகம் எதிர்பார்த்திருக்கிறது.

தவறுகளில் இருந்துபாடம் கற்போம் மேலும் தவறுகளுக்கு துணை போகாத மனநிலையை உருவாக்க முனையும் ஒவ்வொருகணமும் புதிய போதைப் பொருள் விற்பனையாளர் களை இனம் கண்டு களைதலுக்கான வழிகாட்டலை முன் எடுப்பதே இன்றைய தேவையாகும்.

குடிபோதை விற்பனை செய் வோர் பெரும்நிலையில் வலைப் பின்னலுடனான தாதாக்கள் மூலம் எம்மூர் சில்லறை வியாபாரிகளை நியமித்து எம் இளையோர்களை அழிக்க பயன்படுத்துவதால் உள்ளூரில் எம்மவரே வியாபாரிகளாக,விநியோகஸ்தர்களாக மாறிவருகின்றனர். வேலியே பயிரைமேயும் நிலையைமாற்ற மிகவும் கண்காணிப்புடன் எம் தேசத்தின் சமூகவிரோத அழிவில் இருந்து பாதுகாக்கும் பொறுப்பை அலட்சியப் படுத்தாது செயல்பட முன்வாருங்கள்.

போரில்,சுனாமியில் இயற்கையின் அழிவைத்தாண்டிவந்த சமூகமே நம் இளையோரை அழியவிட நாமே காரண மாகலாமா? என்பதனை சிந்தியுங்கள்!

சமயத்தலங்களில் திருவிழா க்களுக்கு பஞ்சமில்லை கோடியாக, லட்சங்களாக செலவு செய்யும் பணத்தில் விழாக்கள் சிறப்புடன் நடந்ததாக சொல் வதை விட சமூக சீரின்மையை களைய முடிந்ததா? முடியும் உங்கள் செல வீனங் களால் இளையோர் மறுவாழ்வு தொழில கங்களை உருவாக்கி தன் நம்பிக்கையூட்ட முன்வாருங்கள்.

போதைப்பொருள் பாவனையின் மறைவிடங்களாக சமயதலங்கள் மாறி வருவதைகண்டும் காணாதவராக இருப்பதை விட்டு நல்லெண்ணத்துடன் உதவமுன் வருவோருடன் அணுகி மறுவாழ் வுக்கு சமயவிழுமியங்களை வாழ்வாக்கி இளையோருக்குதொழில் வழிகாட்டி புது வாழ்வுகாட்டுங்கள்.

குடும்பங்களே கோவிலாகமாற நல்லுறவை வீட்டிலே ஆரம்பியுங்கள். வீட்டில் அன்பில்லை, நம்பிக்கை யில்லை,பொறுப்பில்லை என்பதாலேயே இளையோர் வீதியில் புதிய நட்பைதேடி அலைகிறார்கள். பெற்றோரே,உறவுகளே, உங்கள் பிள்ளைகள் சிதறி சீரற்றுவாழ்வதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நீங்களே. உங்கள் போலி முகங்களைக் களைந்து குடும்ப உறவில் சகவாழ்வில் இளையோரின் மன உணர்வுக்கு மதிப் பளித்து குடி போதைப் பொருட்களை வீட்டிலோ, அயலிலோ கண்டால் துப்பரவுப் பணிகளில் ஈடுபட முன் வாருங்கள். எமது முற்றத்தைச் சுத்தம் செய்வதுடன், அயலிலும் குப்பைகள் விழாமல் முன் எடுக்கும் செயல்களில், ஒன்றிணைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூரப்பட வேண்டிய
# தமிழ் தலைமைகள்

## கே.ரி.கணேசலிங்கம்



செல்லப்பா சுந்தரலிங்கம்
*(19 ஆகஸ்ட் 1895 பிப்ரவரி 1985)*

நினைவுகோரப்பட வேண்டிய இன்னோர்அரசியல் தலைவர் அடங்காத் தமிழன் C.சுந்தர லிங்கம் Q.C என அழைக்கப்பட்ட ஆளுமையையே இம் மாத அவதானிப் பாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உரும்பிராய் பிரதேசந்தில் பிறந்த C.சுந்தரலிங்கம் தமிழர் சார்பில் பாராளுமன்றத்தை மிக நீண்ட காலம் அலங்கரித்த பெருந்தகையாக நோக்கப்படுகின்றார். இவரது ஆரம்பக் கல்வி யாழ்ப்பாண பரியோவான் கல்லூரி யிலும், பின்னர் கொழும்பு பரியோவான் கல்லூரி யிலும் அத்துடன் லண்டன் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியையும் கற்ற மிகச்சிறந்த அறிஞராக விளங்கினார். 1914 இல் தனது Bsc கல்வியை முடித்து விசேட தரத்தில் சித்தியடைந்தார். இவரது கணிதவியல் அறிவினை கண்டு வியந்த இங்கிலாந்து கல்விமான்கள் இவரை Baillol கல்லூரியிலும், ஒஸ்போட், பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளராக பணிபுரிய வாய்ப்பளித்தனர். பின்னர் இலங்கை திரும்பிய C.சுந்தரலிங்கம் பிரித் தானி யாவின் கீழ் இயங்கிய இந்தியா-இலங்கை சேவையில் பணிபுரிந்தார். 1920 இல் சிவில் சேவைப்பணியிலிருந்து விலகியதுடன் சட்டத் தரணியாக பணிபுரிந்தார். அவரது அதீத திறமையால் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் அதிபராக பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. இலங்கை பல்கலைக் கழகத்திலும், கொழும்பு பல்கலைக் கழகத்திலும் கணிதவியல் விரிவுரை யாளராக பணியாற்றி யமை குறிப் பிடத்தக்க அம்சமாகும்.

1940 இல் அரசாங்க சேவை யிலிருந்து ஓய்வுபெற்றார். சுந்தரலிங்கம் அதனை அடுத்து வந்த காலம் முழுமையாக அரசியலில் ஈடுபாடு காட்டியதுடன் முழுநேர அரசியல் வாதியாக மாற ஆரம் பித்தார். 1943-1944 ஆகிய ஆண்டுகளில் அரசாங்க சபைக்கான தேர்தலில் போட்டி யிட்டு தோல்வி அடைந்தார். 1947ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்திற்காக நடந்த தேர்தலில் வவுனியாத் தேர்தல் தொகுதியிலிருந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார் இந்த வெற்றி அரசியல் வாழ்வின் ஆரம்பமாக அமைந்தது சுயேட்சையாக போட்டியிட்டு பாராளுமன்றம் நுளைந்த சுந்தரலிங்கம் டி.எஸ்.சேனநாயக்கா அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச் சரானார். அவரது அமைச்சுப் பதவிக்கான காலம் குறுகியதாக இருந்தாலும் பிரபலமான அமைச்சர்களில் ஒருவாக துலங்க முயன்றனார். 1948ஆம் ஆண்டு இந்தியத் தோட்டத் தொழிலாளாளர் தொடர்பான பாராளுமன்றத்தில் முன்வைக் கப்பட்ட குடியுரிமைச் சட்டத்திற்கு ஆதர வாக வாக்களித்தார். அதே சந்தர்ப் பத்தில் இந்திய- பாகிஸ்தானிய குடிமக்கள் குடியுரிமைச் சட்டத்துக்குரிய வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது சுந்தரலிங்கம் வெளிநடப்பு செய்தார். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக டி.எஸ்.சேனநாயக்கா விளக்கம் கோரிய போது தனது பதவியை துறந்தார். 1951 ஆம் ஆண்டு சிங்கக் கொடியை தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளும் பிரகடனம் பாராளுமன்றத்தில் முன்வைத்த போது பாராளுமன்றப் பதவியை உதறித் தள்ளி வெளியேறினார்.C.சுந்தரலிங்கத்தின் வெற்றிடத்தை நிரப்பு நடை பெற்ற இடைத் தேர்தலிலும் மீண்டும் போட்டி யிட்டு பாராளுமன்றம் சென்றார்.

1952 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் வவுனியாத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அக் காலத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து திரு C.சுந்தரலிங்கம் தொடர்ச்சியாக பாராளுமன்றம் பிரவேசிக்காது பகிஸ்கரிப்பில் ஈடுபட்டார். அதனால் இவர் போட்டியிட்ட தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது அதிலும் போட்டியிட்டு வெற்றி பெற்று மீண்டும் பாராளுமன்றம் சென்றார். 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத்தை பிரதிநித்துவம் செய்த C.சுந்தரலிங்கம் 1959இல் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

1960 நடந்த பாராளு மன்றத் தேர்தலில் மீண்டு சுயேட்சையாக போட்டியிட்ட சுந்தரலிங்கம் சிவசிதம்பரத்திடம் தோற்றுப் போனமை அவரது அரசியலில் பெரும் நெருக்கடியை ஏற் படுத்தியது. அவரால் ஆரம்பிக் கப்பட்ட அரசியல் கட்சி தேர்தலில் திணைக் களத்தில் பதிவுக்காக விண்ணப் பித்த போது அதனை அங்கீகரிக்காத நிலையும் அவரது அரசியல் வாழ்வில் நெருக்கடியை அமைந்தது.

C.சுந்தரலிங்கம் அரசியல் வாழ்வில் Eylon,Beginnihg Of The Free do struggle,Do Documents,என்ற நூல் பிரல பலியமான படைப்பாக அமைந்தது. இளைஞர்களை ஆயுத அரசியலுக்குள் இணைப்பதற்கு வலுவான ஊக்கியாக இந்நூல் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் C.சுந்தரலிங்கத்தை "அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம்" என அழைக்கும் மரபு ஒன்று ஏற்பட்டது.

இவரது அரசியல் வாழ்வு முழுவதும் சர்ச்சை மிக்கதாகக் காணப் பட்டார். அவரது இத்தகைய வளர்ச்சிக்கு புலமைசார் ஈடுபாடும், அரசியல் மீதுள்ள அறிவார்ந்த விவேகமும் காரணமாக அமைந்தது. கணிதவியல் ஆளுமைமிக்க புலமையாளராக காணப் பட்டதுடன் பல்கலைக்கழகங்களில் போதிக்கும் விரிவுரையாளராகவும் தமிழ் மக்களின் அபிலாசை மீதான பற்றுதலும் அவரது அரசியல் வாழ்வு மிளிர்வதற்கு அமைச்சுப் பதவியை துறந்ததிலிருந்து தமிழ் மக்கள் மீதான பற்றுதலோடு செயல்பட்ட செயல் வீரனாக காணப்பட்டார்.

எனவே C.சுந்தரலிங்கம் அரசியல் வாழ்வை புரிந்து கொள்வது மட்டுமின்றி அவரது ஆளுமைகளை எமது தமிழ் சமூகம் பின்பற்றுதல் அவசியமான அரசியல் தேவையாக உள்ளது. அவர் மீதான விமர்சனங்களைக் கடந்து அவரது அரசியல் வாழ்வு மதிப்பிடப்பட வேண்டும். அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் எனப் பெயர் பெற்ற இவரது முயற்சி இலங்கையில் அரசியல் யாப்புத்திருத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அதை எதிர்த்து வழக்காடினார்.

அதற்கு அவர் முன் வைத்த காரணம் அரசியல் யாப்புச் சட்டம் பாராளுமன்ற கட்டத்தில் நடைபெறவில்லை நவரங்கல மண்டபத்தில் நடைபெற்றதைச் சுட்டி அது ஓர் நாடக மேடை அதில் நடந்தது நாடகமே என வாதாடினார்.

பிரிந்த தமிழ்க் கட்சிகளை ஒன்றினைத்து தமிழர் விடுதலைக் கூட்டனியை அரம்பித்த போது அதில் முக்கிய தலைவராகவும் இணைந்து முன்னின்று செயற்பட்டார்.

இவரது அரசியல் முரன் காரணமாக வெளிநாடு செல்ல அரசு அனுமதிக்காத போது அவர் லண்டன் செல்ல முயன்று தடைப்பட்டது சலிப்படையவில்லை ஈற்றில் மகாராணியார் தனது அழைப்பாக தனது கணித ஆசானை அழைப்பதாகக் கேட்ட போது அவருக்கு விசேட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அரச செலவில் லண்டன் சென்றார். இன்றும் பலர் பெருமையடைவதற்கு இவரது ராஜ தந்திரமும் அரசியல் சாணக்கிய செயல்திறனும் காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய படைப்புலகம்

## -நூல் நோக்கு-

-பேராசிரியர் சி.சிவலிங்கராசா-

தேவி பரமலிங்கம் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து "புதியபடைப்புலகம்" என்ற மகுடத்தோடு குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தேவி பரமலிங்கத்தை நான் நன்கு அறிவேன். அமைதியாக, அடக்கமாக, ஆடம்பரமின்றி இலக்கியப் பணி புரிபவர் அமரர் கே.டானியலுடன் அத்தியந்த தொடர்பு பூண்டொழுகியவர்.எங்கே இலக்கியக் கூட்டம் நடைபெற்றாலும் அங்கே இவரைக் காணலாம்.தேவி பரமலிங்கம் ஒரு நல்ல வாசகர், விமர்சனங்களை விரும்புபவர். தமது விமர்சனத்தை மிக மென்மையாக, அதே வேளை ஆழமாக முன்வைப்பவர். இவரது கதைகளின் பாடுபொருளாகப் பெரும்பாலும் அடிநிலை மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்,அவர்கள் சுமந்து நிற்கும் சோகங்கள்,அவற்றை தகர்க்க எடுக்கும் முயற்சிகள் முதலியனவே இடம்பெறுகின்றன. "உள்ளடக்க நேர்த்தி" என்று சொல்லுவார்களே அது நிறைவாகவே உள்ளது. தேவி பரமலிங்கம் என்னும் அமைதியான மனிதனின் உள்ளே ஆவேசமான குமுறல் ஒன்று இருக்கிறது என்பதை இவரது கதைகளைப் படிக்கும் போது உணர்ந்து கொண்டேன்.

இவரின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்தன்மை வாய்ந்தவை. எலும்பும் தசையுமாக எம்மிடையே உலாவரும் பாத்திரங்களையே கதைகளில் உலாவவிட்டிருக்கிறார்.சமூக மேலாதிக்கம் என்பது பல்வேறு காரணங்களால் உருவாகும் என்பதைத் தமது சிறுகதைகளினூடு சொல்லாமற் சொல்லி இருக்கின்றார். சாதி,பணம், பதவி,அதிகாரம்,அரசியல் முதலியன தவறுகளைக் காப்பாற்ற உதவியமையைப் பல எழுத்தாளர்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும் இவ்விடயத்தைப் பரமலிங்கம் சொல்லுவது சுவையாக இருக்கின்றது.

"ஒரே நேரத்தில் சுற்றிவர வள்ளங்கள் வந்து சூழ்ந்து கொண்டதால் ஓடித்தப்புவதற்கு முடியாது திகைத்து நின்ற வலைக்கள்வனை நெருங்கிச் சென்றவர்கள்,கண்டு விக்கித்துப்போய் தங்களுக்குள்ளே ஈனஸ்வரத்தில் சொல்லிக்கொண்டார்கள்."

"எட இவன் எங்கட தலைவற்ற மோன்" இவ்வாறு "கரை ஏறும் அலைகள்" என்ற சிறுகதையிற் கூறும் ஆசிரியர், வேலியே பயிரை மேய்கிறது என்ற முத்தாய்ப்புடன் கதையை முடிக்கின்றார்.அந்தச் சூழலை நன்கு தெரிந்து கொண்டு இக்கதையை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருக்கிறார் என்றே எண்ண வேண்டும். புதுமைப்பித்தன் கூறிய "நான் கண்டது, கேட்டது, காண விரும்பியது, காணவிரும்பாதது" என்ற தொடரை இவரது கதைகளை வாசிப்போர் ஒரு தடவையேனும் உணர்வர்.

ஒரு காலகட்டத்து அரசியற் சூழ் நிலைகளால் மீன் பிடிக்க முடியாமல் கூலித் தொழிலுக்குச் செல்லும் கடற் தொழிலாளர்களின் குடும்ப நிலையைச் சொல்லும் "சுவர்க்க வாசல்"என்னும் சிறுகதை நெஞ்சை நெகிழ வைக்கிறது. யுத்த சூழல் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் பிரச்சனையை யதார்த்த பூர்வமாக இக்கதை சித்தரித்துள்ளது.

வீட்டுப் பணிகள், உத்தியோகம் என்ற இரண்டினுள்ளும் நின்று திண்டாடும் ஒரு பெண்ணைப் பாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட "மத்தளம்" என்ற சிறுகதை இன்றைய சமூக யதார்த்தத்தினைப் பிரதிபலித்து நிற்கிறது.

"பெண்ணாகப் பிறந்தால் எத்தனைபேர் இப்படி எத்தனை இக்கட்டுக்குள்ளே அகப்பட்டு மாய்கிறார்கள், மாயவேண்டியும் இருக்கிறது." என்று ஆசிரியர் கூறு வதைப் படிக்கும் போது "பெண் ணென்று பூமிதனிற் பிறந்து விட்டால் பெரும் பிழை இருக்குதடி" என்று பாரதி பாடியது நினைவுக்கு வருகிறது. அந்தக் கதையில் மாத்திரமல்ல ஆங்காங்கே இன்னும் சில சிறுகதைகளிலே பெண்ணியம் பற்றிய சிந்தனைகளைக் காண முடிகின்றது.

பல்வேறு சமூக நம்பிக்கைகளையும், நடைமுறைகளையும் மூட நம்பிக்கைகள் என்று அழுத்திக் கூறாமல் மென்மையான முறையிலே அவற்றைச் சாடிச் சொல்லும் பாங்கினையும் இவரது கதைகளினூடு காண முடிகின்றது.

"குறைபாடுகள் எல்லாக் குடும்பங்களிலும் ஏற்படுபவைதான் குண்டு மாத்தாச் செய்து கொள்ளும் திருமணங்களில் ஒரு குடும்பம் வாழ மற்றக் குடும்பம் தாழும் என்பதெல்லாம் பொய்யான கூற்றாகவே அவனுக்குப் பட்டது." என்று "அம்மாச்சி" என்ற கதையிலே குறிப்பிடுகின்றார். அம்மாச்சி என்னும் தலைப்பு யாழ்ப்பாணத்து உறவு முறை சொல்லொன்றை ஆசிரியர் கச்சிதமாக கையாண்டமைக்குச் சான்றாகிறது. அம்மாச்சி, பெத்தாச்சி, அப்பாச்சி, பெரியாச்சி முதலான உறவு முறைச் சொற்களை இன்றைய தலை முறையினர் அறியமாட்டார்கள்.


இவரது எல்லாக் கதைகளிலும் ஒரு தனித்துவமுண்டு எனினும் கதைப் பொருளின் ஊடுபாவாக ஓடுவது ஏழ்மை, ஏற்றத்தாழ்வு, குடும்பச்சிக்கல், சிதைவு முதலியவைகளே எனலாம்.

ஒரு எழுத்தாளன் தனது படைப்புக்களுள் ஏதோ ஒரு வகையிலே பாத்திரமாக, அல்லது பாத்திரப் பங்காளியாக வருவது தவிர்க்க முடியாததே. அதற்கு நல்ல உதாரணமாக அமைவது "சுவடுகள்" என்ற சிறுகதையாகும். டானியலுக்கும் இவருக்கும் இருந்த நெருக்கமான உறவினைக் காட்டும் சுவடுகள் என்னும் கதையினூடு டானியலின் கருத்து நிலையோடு இவர் சமதையாகப் பயணிப்பதையும் காட்டுகின்றது.

பாத்திரங்களுக்கு ஏற்ற வகையிலே பேச்சு வழக்கினைச் சிறப்பாக சித்தரித்துப் பதிவு செய்துள்ளார். நவீன இலக்கியங்களில் மொழி என ஆராயப் புகுவோர் "புதிய படைப்புலகம்" என்னும் சிறுகதைத் தொகுதியை நிராகரித்து விடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேண்டும் விழிப்புணர்வு

அ.குமரேசன்

பூமி சூடாவதைத் தடுக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்ற விழிப்புணர்வு இப்போது பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட விழிப்புணர்வு உள்ளவர்கள் எல்லா மட்டங்களிலும் இருக்கிறார்கள். அரசாங்க அலுவலர்கள், விஞ்ஞானிகள், சுற்றுச் சூழலியலாளர்கள், பன்னாட்டு நிறுவனங்கள், சாதாரண மக்கள் என்று எல்லாத் தரப்பிலும் இதை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

முதலில் நாம் பிரச்சனை இதுதான் என்று அடையாளம் காணவேண்டும். அடுத்து செயலில் இறங்க வேண்டும்.

பூமியின் வெப்பம் வேகமாக அதிகரிப்பதோடு, காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் அளவும் கவலை யளிக்கும் அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்று பார்த்தோம். எனவே, இரண்டுக்கும் தொடர் பிருக்கிறது என்ற முடிவுக்கு வருவது நியாயம்தான். கரியமில வாயு எப்படி காற்று மண்டலத்தில் சேர்கிறது?

புகைபடிவ எரிபொருள்களை (பெட்ரோல், நிலக்கரி, இயற்கைஎரிவாயு) எரிப்பதால் சேர்கிறது. புகைபடிவ எரிபொருள்கள், மின்சாரம் உள்ளிட்ட மனிதர்களின் சக்தித் தேவைகளுக்காக எரிக்கப்படுகின்றன.

ஆகவே, நமது மின்சார நுகர்வைக் குறைத்துக் கொள்வதும் மின்சார உற்பத்திக்கு வேறு வழிகளைக் கண்டு பிடிப்பதும் தான் சிறந்த வழி.இந்த நோக்கத்தோடு இன்று பல நாடுகள் செயல் படுகின்றன. மின்சார உற்பத்திக்கு மாற்று மூலங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற புகைபடிவ எரிபொருள்களுக்கு மாற்றாக என்ன உண்டு என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

இவற்றுக்கு மரபுசாரா ஆற்றல் ஆதாரங்கள் என்று பெயர். உடனடியாக நம் கண்ணில் படும், மின்சார சக்திக்கான மாற்று ஆதாரங்கள் காற்றும் சூரிய ஒளியும் தான். தமிழ் நாட்டில் பல இடங்களில் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள காற்றாலைகள் (டர்பைன்கள்), காற்றின் ஆற்றலால் சுழன்று மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

இருந்தாலும், இந்த வழியில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு குறைவு. இந்த வழியில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபட்டிருக் கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சூரிய ஒளி மின்சாரம். இந்தியாவில், பல இடங்களில் கட்டடங்களின் கூரைகளில் சோலார் பேனல்கள் பொருத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சூரியனின் வெப்பத்தைப் பயன்படுத்தி இவை மின்சாரத்தைத் தயாரிக்கின்றன.

இதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தைச் சிறிது காலம் சேமித்து வைத்துக்கொள்ளவும் முடியும். குளிர்ச்சியான நகரங்களில் வெந்நீரின் தேவை அதிகம்.

எனவே, அங்கே சூரிய வெப்பத்தால் தண்ணீரைக் கொதிக்க வைக்கும் சோலார் ஹீட்டர்கள் சிறந்த சாதாரணம்.

தாரவங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது உயிரி-எரிபொருள் (Bio-fuel). காட்டாமணக்கு அப்படிப்பட்ட ஒரு தாவரம். அதை வளர்ப்பதற்கு அரசாங்கம் ஊக்கம் தருகிறது.

எதிர்காலத்தில் காட்டாமணக்கு ஒரு நல்ல எரிபொருளாவதற்கு அருமையான வாய்ப்பிருப்பதால்,இந்தியாவில் பல விவ சாயிகள், வழக்கமாகத் தாங்கள் சாகுபடி செய்து வந்த பயிர்களை விட்டுவிட்டு இதைப்பயிரிட ஆரம்பித்திருப்பார்கள். கரியமில வாயு வெளியேறும் அளவைக் குறைப்பதற்கான ஆராய்ச்சிகளுக்கு அரசாங்கம் நிதி வழங்க வேண்டும்.

காற்று மாசு அடைவதற்கு முக்கிய காரணமாக இருப்பவை வாகனங்கள். கார்களும் பஸ்களும், லொரிகளும் புகைக் குழாய்கள் வழியாகக் கரும்புகையை வெளியிடுவதைப் பார்த்திருப்போம்.

சில நாள்களுக்கு முன்புகூட இந்தக் காட்சி மிக மிகச் சாதாரணமாக இருந்தது. ஆனால், இப்போதெல்லாம் அதிகாரிகள் வாகனங்களைக் குறிப்பிட்ட நாள்களுக்கு ஒருமுறை மாசுக்கட்டுப் பாட்டு சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

வீதிகளில் அந்த வாகனங்கள் ஓடத் தொடங்குவதற்கு முன்பாக, அவை காற்றை மாசுபடுத்தவில்லை என்ற சான்றிதழைப் பெற்றாக வேண்டும். பல நாடுகளின் அரசுகள், சுற்றுச் சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தாமல் வீதிகளில் ஓடும் கார்களைத் தயாரிக்கும் வழிகளை ஆராயச் சொல்லி கார் தயாரிப்பாளர்களைக் கேட்டிருக்கின்றன.

இந்த நடவடிக்கைகள் ஒரு புறமிருக்கட்டும். தொழிற்சாலைகள் காற்று மண்டலத்துக்குத் தீங்கு செய்யும் வாயுக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என அரசுகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன. இந்த வாயுக்குள் பசுமைக் குடில் விளைவை அதிகரிக்கின்றன. அல்லது பாதுகாப்பான ஓசோன் அடுக்கை அழிக்கின்றன.

தொழிற்சாலைகள் அதிக பட்சமாக எவ்வளவு வாயுக்களை வெளியிடலாம் என்பதற்கான சட்டங்கள் இன்று பல நாடுகளில் வந்துவிட்டன. தொழிற்சாலைகளில் சோதனைகள் நடத்தப் படுகின்றன.

விதிகள் பின்பற்றப்படவில்லை என்றால் அந்தத் தொழிற்சாலைகளுக்கான உரிமம் மறுக்கப்படுகிறது அல்லது விலக்கிக் கொள்ளப்படுகிறது. எனவே, தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் தூய காற்றுச் சட்டம் என்றே ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம், விஓசி, சிஎப்சி போன்ற தீங்கான பொருள்களைக் குறிப்பிட்ட அளவுக்குத் தான் வெளியேற்றலாம் என்பதைக் கட்டாயமாக்குகிறது.

விஞ்ஞானிகள் கருத்துப்படி, அண்டார்க்டிக் பகுதிக்கு நேர்மேலே இருக்கும் ஓசோன் அடுக்கில் விழுந்த ஓட்டை விரிந்து விரிந்து, இப்போது வடஅமெரிக்கக் கண்டம் அளவுக்குப் பெரிதாகிவிட்டது.

இதனால், நமக்குத் தீங்கு செய்யும் வெப்பம் எந்த அளவுக்கு உள்ளே வருகிறது என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? உடனே செயலில் இறங்க வேண்டிய தருணம் வந்துவிட்டது இல்லையா?

அமெரிக்காவில் மேலும் சில சட்டவிதிகள் விரைவில் வர இருக்கின்றன. அதன்படி, நிறுவனங்கள் தயாரிப்புகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல், இந்தப் பொருளில் சுற்றுச் சூழலுக்குக் கேடு செய்யும் இன்னின்ன வேதிப் பொருகள் உள்ளன என்பதைக் குறிக்கும் லேபிளை ஒட்டியாக வேண்டும்.

மக்கள் அந்த லேபிளைப் படித்து விட்டு அந்தப் பொருளை வாங்குவதா, வேண்டாமா என்று முடிவு செய்வார்கள். இதனால் அந்த நிறுவனங்கள் வேறு தொழிலுக்கு மாறும் அல்லது தீங்கான பொருள்களுக்கு மாற்றாக வேறு பொருள் களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய் வார்கள் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இன்னொரு வழியும் இருக்கிறது. சுற்றுச் சூழலுக்குக் கேடு செய்யாத பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளின் மேல், "இவை விஓசி அல்லது சிஎப்சி பொருள்களை வெளியேற்றுவது கிடையாது. இவை சுற்றுச் சூழலுக்கு ஏற்றவை என்று உறுதி யளிக்கும் லேபிளை ஒட்டலாம். அதனால், மக்கள் அப்படிப்பட்ட பொருள்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவார்கள், விற் பனையும் அதிகரிக்கும்.

இந்தியாவிலும், புவி வெப்பம் அதிகரிப்பதன் அபாயங்கள் குறித்து இந்திய அர சுநன்றாக அறிந்து வைத்திருக்கிறது. கறாரான மாசுக் கட்டுப் பாட்டுச் சட்டங்கள் இங்கு இருக்கின்றன.

ஒரு தொழிற்சாலை தொடங்கு வதற்கு உரிமம் வழங்குவதற்கு முன்னால் சுற்றுச் சூழலுக்குத் தீங்கு ஏற்படாது என்பதை அதிகாரிகள் உறுதிப் படுத்தியாக வேண்டும்.

உலகம் முழுவதும் இப்போது இயற்கை விவசாயம் குறித்த ஆர்வம் அதிகரித்து வருகிறது. இந்தியாவிலும், இலங்கையிலும் இந்த ஆர்வம் அதிகரித் திருக்கிறது. இராசாயன உரங்களைப் பயன் படுத்தாமல் பயிரிடுவதுதான் இயற்கை விவசாயம்.

இதனால் நம் உடல் நலத்துக்கும் உலகத்தின் நலத்துக்குமாக இரண்டு நன்மைகள் விளைகின்றன. இயற்கை உரங்களால் உணவில் நச்சுப்பொருள் கலப்பதில்லை. இரசாயன உரங்கள் குறைக்கப்படுவதால் மீத்தேன், நைட்ரஜன் ஆக்ஸைட் ஆகியவை குறைகின்றன.

பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பது மற்றொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை. பிளாஸ்டிக் பைகள், பயன்படுத்திவிட்டு எறிந்துவிடக் கூடிய ஸ்டைரோ ஃபோம் கப்கள் ஆகியவை இன்று உலகெங்கும் வெகு சாதாரண மாகப் புழங்குகின்றன.

அவை சணல், காகிதம் போன்ற பொருள்களைப் போல மக்குவதில்லை, மண்ணோடு கலப்பதில்லை.

குப்பைகளில் அதிக அளவில் இருப்பது பிளாஸ்டிக் கழிவுகள்தான். குப்பைகள் பொதுவாகப் பள்ளமான இடங்களில் கொட்டப்படுகின்றன.

நிலத்தின் மேலேயே இருந்து கொண்டு, மண்ணையும் காற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சாக்கி வருகின்றன.

குப்பைகளை எரிக்கும்போது, பிளாஸ்டிக்கும் ஸ்டைரோ ஃபோமும் புவி வெப்பத்தை அதிகரிக்கும் பொருள்களை வெளியிடுகின்றன. இது வேறு வழிகளிலும் நம் உடல் நலத்தைத் தாக்குகிறது.

அரசால் சட்டங்களைக் கொண்டு வரத்தான் முடியும். சட்ட விதி களைக் கடைப்பிடிக்க வேண்டியது நாம்தான்.

சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்பாளிகள் ஆவர்.
கவிதை,நேர்காணல்,சிறுகதை, கட்டுரை,துணுக்குகள்,புதிய தகவல்கள், பாரம்பரிய விடயங்கள் , கிராமியச் சிறப்புக்கள் இவற்றினை எழுதி அனுப்பினால் எமது வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமாக அமையும் இவற்றின் தரங்கண்டு பிரசுரிக்கப்படும்.
புதிய நூல்களின் இரண்டு பிரதிகளை அனுப்பி வைத்தால் நூல் நோக்கு பகுதியில் பிரசுரிக்க முடியும்
ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் முகம்



– சின்னஅம்பலத்தார்–

**க.கதிர்வேல் வேலணை**

ஒரு வழக்கில் இரண்டு தீர்ப்புக்கள் நம்பமுடியவில்லை?

நீர் இலங்கையில் இருந்தால் இவ்வாறான நிகழ்வுகளை நம்பித்தான் ஆக வேண்டும்.

**சிவமைந்தன், சிறுவிளான்**

அண்மையில் நடைபெற்ற அழகியல் தொடர்பான மாகாண அமைச்சின் செயலமர்வில் உத்தியோகத்தர்கள் மட்டும் தான் இருந்ததாயும் கலைஞர்களை காணவில்லை என்றும் கூறப்படுகின்றதே?

அமைச்சுக்கும் அமைச்சருக்கும் அரச பணியாளர்கள் தானே கட்டுப்பட வேண்டும்.(கலைஞர்கள் கட்டற்றவர்கள் என்பது இது தானோ)

**சி.க.ரவி, நெல்லியடி**

அரச உயர் அதிகாரிகள் பலரின் வீடுகளில் பவர்கட் ஆனாலும் இருட்டில் இருக்கிறார்களே ஏன்?

நவம்பரில் மட்டும் தான் அப்படி. ஏனைய மாதங்களில் விளக்கோ மெழுகுதிரியோ ஏற்றுவார்கள். (சுவாமி அறை விளக்குகள் பற்றி அறிய முடியவில்லை)

**த.ராகவி, வட்டக்கச்சி.**

சின்ன அம்பலத்தார் நீங்கள் யாரையோ தேடுவதாகச் சொன்னார்கள் நான் உங்களுக்கு உதவலாமா?

கொஞ்சம் பொறும்.சான்றிதழ் தானே தருவீர்களாம் அது தந்தால் சரியே.

**சி.க.முகுந்தன், பண்டத்தரிப்பு.**

எமது அதிகாரிகள் மத்திய அரசினால் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களை ஆகா ஒகே என்றும் மாகாண அமைச்சுக்கு ஏனோ தானோ என்றும் செய்கிறார்களாமே?

நீங்கள் அனுப்பியது கேள்வியா பதிலா?

**செல்வி மனோகரி, தெல்லிப்பளை.**

மாகாண அரச விழாக்களில் அரச அதிகாரிகளின் பிரசன்னம் இருப்பதில்லையே ஏனைய்யா?

ஊதியம் மத்தியில் இருந்து தானே வருகின்றது.

**நகுலன், உருத்திரபுரம்.**

மீனவர்களிற்கான தூக்குத்தண்டனை தீர்ப்பு விவகாரம் எங்கே போய் முடியும்.

வீதி மறிப்பு,கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் ,பேரணி, பொது மன்னிப்பில் போய் முடியும் அவ்வளவு தான்.

**நல்லதம்பி, கைதடி வடக்கு .**

யாழ்ப்பாண இளைஞர்-யுவதிகள் தற்போது எங்கே போகிறார்கள்?

அவர்கள் பாதை அகல பாதாளத்தை நோக்கியது-இது அவர்களிற்கும் தெரியும்.


**றம்மியா, வெள்ளவத்தை.**

யாழ்ப்பாணம் கோட்டையை அண்மித்த கடற்பிரதேசம் காலி முகத்திடல் கடற்கரையை ஞாபகப்படுத்து கின்றது. இதற்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

கொஞ்சம் பொறுங்கோ.இவர்களின் வேகம் உங்களையும் மிஞ்சி எங்கயோ போகப்போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுபெரும் எழுத்தாளர் எஸ்பொ

# அஞ்சலிக் குறிப்பு



ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளரும் 'எஸ்பொ' என தமிழிலக்கிய உலகில் அறியப்பட்டவருமான எஸ்.பொன்னுத்துரை அவர்கள் 26-11-2014 இல் அவுஸ்ரேலியாவில் சிட்னி நகரில் காலமானார்.

1932ல் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த அவர் சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், மொழி பெயர்ப்பு என தமிழ் இலக்கியத் தளத்தின் பல்துறை வித்தகராக திகழ்ந்தார்.

தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர்கல்வி பயின்ற இவர் மட்டக்களப்பில் ஆசிரியராகவும் அதிபராகவும் பின்னர் நைஜீரியாவில் ஆசிரியா கவும் பணியாற்றினார்.

1990 முதல் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வந்த அவர் தமிழ்நாட்டில் 'மித்ர' பதிப்பகத்தை நிறுவி இறுதிக்காலம் வரையிலும் தனது நூல்களுடன் பல தமிழ் எழுத்தாளர்களின் நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டார்.

தமிழின் புலம்பெயர்ந்தோர் இலக்கிய வகையினை அடையாளப்படுத்தியதில் அவரும் எழுத்தாளர் இந்திரா பார்த்த சாரதியும் தொகுத்து பதிப்பித்த 'பனியும் பனையும்' முக்கியமான வெளியீடாகும்.

அவர் தனது சுயசரிதையை 'வரலாற்றில் வாழ்தல்' என்னும் தலைப்பில் இரண்டாயிரம் பக்க நூலாக வெளிக்கொணர்ந்தார்.

இவரது 'சடங்கு' சிறந்த தமிழ் நாவல்களில் ஒன்றாக மதிப்பிடப்படுகின்றது.

இவருக்கு கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010ம் ஆண்டிற்க்கான வாழ் நாள் இயல் விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு தமிழ் முற்றம் சார்பாக எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.


## வின்லான்ட் புத்தகசாலை

## Winland Book Depot

2015 ஆம் ஆண்டுக்கான அழகிய வடிவமைப்பில் டயறிகளை பெற்றுக் கொள்ளலாம்
(வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களிற்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.)
பாடசாலை உபகரனங்களிற்கு விசேட விலைக்கழிவு 10%-20% வரை வழங்கப்படும்.
எமது வெளியீடுகளிற்கு 20%-40% விலைக்கழிவு வழங்கப்படும்.
2015 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட தரம் 6,10 ஓவியவிழி (சித்திரம்) நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இல, 61 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:-0774412518



காவலூர் இ.விஜேந்திரன் அவர்களால் நாவலர் வீதியில் அமைந்துள்ள சத்தியா பிறிண்டேர்ஸ் இல் 2014 டிசம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org